श्रीरंगनायिकासमेत श्रीरंगनाथ परब्रह्मणे नमः ॥

श्रीमते रामानुजाय नमः ॥

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

कुमारवरदाचार्यैः अनुगृहीतानि

श्रीमद्वेदान्तदेशिकविषयकस्तोत्राणि ॥

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் விஷயமான ஸ்தோத்திரங்கள்

(குமார வரதாசாரியர் அருளியவை)

ஸ்ரீ. உ. வே. வித்வான் தி. ஈ. ரங்கநாதாசாரியர் M. A.,
(ஸாஹித்யரத்ன, ராஷ்ட்ரபாஷா ப்ரவீண,
சிக்ஷண கலாப்ரவீண, சிரோமணி)
இயற்றிய தமிழ் உரையுடன்

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்தோத்ரபாட கோஷ்டியாரால்

பராபவ வருஷம் ஐப்பசி திருவோணத்தில்
வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்தோத்ர பாட கோஷ்டியாரின் 2-வது வெளியீடு.

22—10—66



जयति श्रुतिचूडार्यः श्रीमानद्भुतचन्द्रमाः ।
सकला यत्र हि कलाः निर्मलाः नित्यपुष्कलाः ॥

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

விஜ்ஞாபனம்

ஸ்ரீ தேசிகன் அஷ்டோத்தர சதநாமாவளியை (ஆனித் திருவோணத்தில்) அர்த்தத்துடன் வெளியிடும் பேறு அடியோங்களுக்கு கிடைத்தது. இப்போது (ஐப்பசி திருவோண நன்னாளில்) ஸ்வாமி தேசிகன் விஷயமாக நயினாராசார்யர் எனப்படும் குமார வரதாச்சாரியர் அருளிச் செய்த வடமொழி தென்மொழி நூல்களை எல்லாம் திரட்டி ஸ்ரீ தேசிகன் அடியார்கள் கரகமலங்களில் ஸமர்ப்பிக்கும் பாக்யம் அடியோங்களுக்குக் கிடைத்தது. இதனைக் கண்ணுறும் பெரியோர்கள் ஸ்ரீ தேசிக க்ரந்தங்கள் நாடு முழுவதும் பரவவேண்டும் என்று ஆசாஸிப்பதோடு அடியோங்களுக்கும் மேன்மேலும் ஸ்ரீ தேசிகன் கைங்கர்யங் களில் ஈடுபாடு உண்டாகுமாறு ஆசீர்வதிக்கவேண்டும் என்று இறைஞ்சுகின்றோம்.

"தாய் நினைந்த கன்றே யொக்க" அடியோங் களுக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும் கைமாறு கருதாது செய்து வருபவரும் ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளில் ஆர்வம் உண்டாகுமாறு செய்து ஸ்தோத்ரங்களையும் நல்வார்த்தை களையும் சொல்லித் தருவதோடு அமையாது, இப்போது வெளியாகும் ஸ்தோத்ரங்களுக்கு எளிய தமிழில் உரையும் எழுதித் தந்து, இதை வெளியிடவேண்டுவனவும் செய்த எங்கள் ஆசிரியர் ஸ்ரீ உப. வே. வித்வான் தி. ஈ. ரெங்கநாதா சாரியர் (எம். ஏ., ஸாஹித்ய ரத்ன, ராஷ்ட்ரபாஷாப்ரவீண சிக்ஷண கலாப்ரவீண, சிரோமணி) ஸ்வாமிக்கு அடியோங்கள் க்ருதஜ்ஞதையை வெளியிடத்தக்க சொற்க ளின்மையால் சிரமேற் கைகூப்பி நிற்கின்றோமத்தனை.

இதனை முழுவதும் கடாக்ஷித்து தம்முடைய ஆசியையும் முன்னுரையையும் வழங்கிய ஸ்ரீ உபயவேதாந்த துரந்தர வித்வான் தர்க்கரத்ன, ந்யாய வேதாந்த கேஸரி, தேசிக

தர்சன ரத்நாகர மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ரியர் ஸ்வாமிக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எம்பெருமானையும், ஆழ்வார், எம்பெருமானார் தேசிகர் களையும், அவர் தம் ஸ்ரீ ஸூக்திகளையும் நினைதொறும் சொல்லும் தொறும் நீர்மல்கு கண்ணினராகும் ஸ்ரீ உப. வே. D. ராமஸ்வாமி ஐயங்கார் (Advocate) அவர்களும் எங்களை அன்புடன் ஊக்குவித்தருளியதற்குத் தலையல்லால் கைம்மாறிலம்.

அச்சுப்பிரதிகளை அவ்வப்பொழுது பரிசோதித்து நல்ல முறையில் வெளியிட உதவிய மோஹநூர் சிரோமணி ஸ்ரீ உப. வே. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமிக்கு எங்கள் க்ருதஜ்ஞதையை தெரிவித்துக்கொள்கிறோம்.

மிகக் குறுகிய காலத்தில் மிக நல்லமுறையில் இந்நூலை அச்சிட்டுத்தந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகத்தார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்தோத்ர பாட கோஷ்டியார்,
ஸ்ரீரங்கம்.

॥ श्रीः ॥

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।

பூமிகை

गुरोर्नाम सदा जपेत् என்று ஆசார்யன் திருநாமத்தை எப்பொழுதும் அநுஸந்தாநம் செய்தல் வேண்டுமென்கிறது சாஸ்த்ரம். அதை அடியொற்றி ஆசார்ய ரத்நமாகிய ஸ்ரீ தேசிகனிடத்தில் ஈடுபட்டு பூர்வர்கள் பலர் ஸ்தோத்ரங்களை அருளியுள்ளார்கள். மதாந்தரத்தைச் சேர்ந்துள்ள வித்யாரண்யமுநி, அப்பயதீக்ஷிதர், அக்ஷோப்யமுநி போன்றவர்கள் ஸ்வாமியின் ஞாந வைராக்யாதிகளில் ஈடுபட்டுத் தமது கிரந்தங்களில் புகழ்கின்றனர்கள். ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா ? மஹாசார்யர், பிரதிவாதி பயங்கரம் அண்ணன் முதலிய மஹான்கள் ஸ்வாமி விஷயமான ஸ்தோத்ரங்களைச் செய்திருக்கின்றனர்கள். அவற்றுள் தேசிகன் திருக்குமாரரும் ராமாநுஜ ஸித்தாந்த விஜயத்வஜருமான நயினராசார்யர், அருளிய தேசிக ஸ்தோத்ர பஞ்சகமும், பிள்ளையந்தாதி எனும் த்ரமிட பிரபந்தமும் சிறந்தவை.

இதை அடியொற்றியே பிற்பட்டவர்கள் ப்ரபத்தி திநசரி முதலிய கிரந்தங்கள் எழுதியுள்ளார்கள்.

இத்தகைய மேன்மைவாய்ந்த ஸ்தோத்ர பஞ்சகத்திற்கும், பிள்ளையந்தாதிக்கும் எளிதான தமிழுரையை நம் ஸ்ரீ உப. வே. தி. ஈ. ரங்கநாதாசார்யர் எழுதி உபகாரம் செய்துள்ளார். ஸம்ஸ்கிருதத்தில் பரிசயம் குறைந்தவர்களும், செந்தமிழ் பழக்கம் அற்றவர்களும் பயன் பெற்று உய்யவே இது அமைந்துள்ளது.

வியாக்யானகர்தா உபய வேதாந்தங்களிலும் ஸம்பிரதாயத்திலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் தேர்ச்சிபெற்றவர். எம். ஏ. பட்டம் பெற்றவருமாவர், திநசரியில் ஸ்ரீ தேசிக

ஸ்தோத்ரங்களை பலருக்கு ஸ்வயம் பிரயோஜநமாய் சொல்லி வைத்து ஆஸ்திகம் தழைக்க க்ருஷி செய்து வருகிறார்.

அவரிடத்தில் ஸ்தோத்ரப் பாடங்களைப் பயின்றுவரும் வித்யார்த்திகளும், உத்யோகஸ்தருமான ஸம்ப்ரதாயாபிமானிகள் பலர் இதை முத்ரணம் செய்து நாடெங்கும் வழங்க முற்பட்டிருப்பது எல்லோருடைய பாக்ய விசேஷமே. பிள்ளையந்தாதி உரையில் ஆங்காங்கு இராமாநுச நூற்றந்தாதிக்கும் இதற்குமுள்ள ஒற்றுமையை உரைகாரர் தெளிவித்திருப்பது உற்று நோக்கத்தக்கது.

இம்மாதிரியான ஸத்ஸம்பிரதாய நூல்களை வெளிப்படுத்தி மேன்மேலும் ஸ்ரீ தேசிகனுடைய கருணாகடாக்ஷத்தைப் பெற்று ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ர பாட கோஷ்டியார் க்ஷேமத்தை அடையவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

தி. ஈ. வீரராகவாசார்யர்,
ஸ்ரீமதுராந்தகம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

முன்னுரை

ஸ்ரீரங்க திவ்ய க்ஷேத்திரம் இப்பொழுது மீண்டும் ஸ்ரீ தேசிக தர்சனத்திற்குத் தலைநகராகத் திகழ்கிறது. ஸ்ரீரங்கநாச்சியார் வீற்றிருக்கும் ஸந்நிதிக்கு அடுத்தவடக்கில் மிகுந்த அண்மையில் (ஒரு மதிட்சுவர் மட்டும் இடையிட) ஸ்வாமி தேசிகன் விபவத்தில் எழுந்தருளியிருந்த திருமாளிகை ஸுரக்ஷிதமாக விளங்குகிறது. அந்தப் பரம பாவனமான திருமாளிகையில் சென்ற விசுவாவஸு (1965) ஆண்டில் ஆனி சிரவணத்தில் தேசிக பக்தர்கள் சிலர் கூடி "ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்தோத்திர பாடகோஷ்டி" என்னும் ஒரு குழுவை நிறுவினர். அந்தக்குழு ஸ்ரீ தேசிகன் திருவருளுக்கிலக்காகி உயர்ந்த தொண்டுகள் பலவற்றை புரிந்து வருகின்றது. ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் தி. ஈ. ரங்கநாதாசாரிய M. A. ஸ்வாமி செய்தருளும் பேருதவியால் அது வெகு விரைவில் முன்னேற்றமடைந்து லௌகிகத் துறைகளில் உத்யோகம் பார்த்துவரும் பல யுவர்கள் ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்திரங்களை மனப்பாடம் செய்து சிரவணம்போன்ற புனித நன்னாட்களில் அந்த ஸ்தோத்திரங்களின் மங்களஒலியை திருவரங்கத்துத்திருவீதிகளில் பரப்பி வருகின்றனர். ஆழ்வார் ஆசார்யர்கள் திருநக்ஷத்திரங்களில் பல ஆசார்யச்ரேஷ்டர்களையும் பண்டிதர்களையும் அழைத்து அவர்களது உபந்யாஸங்களைக்கேட்டு அவற்றின் மூலம் அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாய அர்த்த விசேஷங்களை அறிந்து இன்புறுகின்றனர். அரங்கமாநகரில் தேசிகன் திருமாளிகை இன்று தேசிக தர்சனம் நிருத்தமிடு அரங்கமாகப் பிரகாசிக்கின்றது.

தாம் அடைந்து அனுபவிக்கும் அருமை பெருமைகளையும் இன்பத்தையும் வெளியிடங்களிலுள்ள பல தேசிக பக்தர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பி அந்தக் கோஷ்டியினர் தேசிக பக்தர்கள் அவசியம் அனுபவிக்கவேண்டிய நூல்களை அச்சிட்டு ப்ரசுரம் செய்து வருகிறார்கள். குழுவின் முதல் ஆண்டு நிறைவு விழாவின்போது ஸ்ரீ தேசிகன் அஷ்டோத்தர சத நாமாவளியை ஒவ்வொரு நாமத்தின்

அர்த்தத்தைத் தமிழில் விளக்கி அச்சிட்டு உதவினார்கள். "யாநி நாமாநி கௌணாநி விக்யாதாநி மஹாத்மந:" என்ற பெருமை தேசிகன் திருநாமங்களுக்கும் உண்டன்றோ இப்பொழுது, தேசிகன் திருக்குமாரரும் சிஷ்யருமான குமார வரதாசாரிய ஸ்வாமி தேசிகன் விஷயமாக அருளிச் செய்திருக்கும் ஸ்தோத்திர பஞ்சகங்களையும் (ஐந்து வடமொழி ஸ்தோத்திரங்களையும்) "பிள்ளையந்தாதி" என்னும் தமிழ்ப் பிரபந்தமொன்றையும் எளிய தமிழ் அர்த்தத்தோடு பதிப்பிக்கிறார்கள். இது மிகவும் அவசிய மான ஒரு தொண்டு "யதீயசரிதம் ஸதாம் ஸுசரித வ்யவஸ் தாபகம்" என்ற பெருமைபெற்ற தேசிகனது திவ்ய சரித்திரத்தையும் அவ்வாசார்யோத்தமனது அஸதார ஸாதாரணமான பெருமைகளையும் உள்ளபடி உணர இதிலடங்கிய ஆறு நூல்களும் இன்றியமையாதவை. சுலோ கங்களுக்கும் பாசுரங்களுக்கும் எளிய அழகிய தமிழ் உரை அமைக்கப்பட்டிருப்பது மிகவும் போற்றற்பாலது அதை அமைத்துக்கொடுத்த கோஷ்டியாரின் உபாத்தியாயரையும் அவ்வுரையோடு அந்த ஆறு நூல்களையும் ப்ரசுரித்த கோஷ்டியாரையும் அவர்களது உத்ஸாஹத்தையும் ஊக் கத்தையும் அனைவரும் பாராட்டவேண்டும். இம்மாதிரி பல ஸ்தோத்திரங்களையும் இவர்கள் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இவரும் ஒரு தேசிகனேயோ என்று வியக்கத்தக்க ஞானானுஷ்டான சீலராய் விளங்கிவரும் ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் மதுராந்தகம் வீரராகவாசாரிய ஸ்வாமியினுடைய அபிநந்தனத்தையும் ஆசியையும் பெற்றிருப்பதே இந் நூலின் பெருமைக்குத் தகுந்த சான்று.

இப்புத்தகத்துக்கு ஒரு முன்னுரை எழுத வாய்ப்பளித்து அவ்வழியாக இந்தப் பெரிய தொண்டில் அடியேனுக்கும் ஒரு சிறிய பங்களித்த கோஷ்டியினருக்கு அடியேனுடைய நன்றி. "வாழ்க தேசிகன் வாழ்க தேசிக தர்சனம்"

சென்னை
7—10—1966

D. ராமஸ்வாமி
(Advocate.)

॥ श्रीः ॥

श्रीमते लक्ष्मीहयवदन परब्रह्मणे नमः ।

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।

(1)

॥ श्रीमद्वेदान्तदेशिकमङ्गलाशासनम् ॥

ஸ்ரீ வேதாந்த தேசிக மங்களா சாஸனம்

ஸ்ரீமத் வேதாந்த தேசிக மங்களாசாஸனம் ஸ்வாமி தேசிகனின் குமாரராகிய வரதாசார்யர் அருளிச் செய்தது. 13 ச்லோகங்கள் கொண்டது. இதில் ஸ்வாமி தேசிகனின் அவதாரம் முதலாக அவர் செய்த உபகார பரம்பரைகளை நினைத்துப் பல்லாண்டு பாடுகிறார். ஸ்வாமி தேசிகனுக்கும் தமக்கும் உள்ள பலவகை சம்பந்தங்களையும் 12-வது ச்லோகத்தில் அனுஸந்திக்கிறார்.

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்த ஸப்ததி ரத்ன மாலிகையிலிருந்து சில ச்லோகங்களையும் இந்த மங்களா சாஸனத்தோடு சேர்த்து அனுஸந்திப்பது அநேக திவ்ய தேசங் களில் வழக்கத்தில் இருந்து வருகிறது.

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

श्रीमल्लक्ष्मणयोगीन्द्रसिद्धान्तविजयध्वजम् ।
विश्वामित्रकुलोद्भूतं वरदार्यमहं भजे ॥

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே ॥

எம்பெருமானாருடைய ஸித்தாந்தத்தின் வெற்றிக் கொடி போன்றவரும் விச்வாமித்ர குலத்தில் தோன்றியவருமான வரதாசார்யரை வணங்குகிறேன்.

सर्वतन्त्रस्वतन्त्राय सिंहाय कविवादिनाम् ।
वेदान्ताचार्यवर्याय वेङ्कटेशाय मङ्गलम् ॥ १ ॥

ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவிவாதிநம் ।
வேதாந்தாசார்ய வர்யாய வெங்கடேஶாய மங்களம் ॥

ஸர்வ தந்த்ர ஸ்வதந்திரரும், கவிவாதி சிங்கமும், வேதாந்தாசாரியருமான வேங்கடேசன் என்ற திருநாமமுடைய ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

नभस्य मासि श्रोणायां अवतीर्णाय सूरये ।
विश्वामित्रान्वयायास्तु वेङ्कटेशाय मङ्गलम् ॥ २ ॥

நபஸ்ய மாஸி ச்ரோணாயாம் அவதீர்ணாய ஸூரயே ।
விச்வாமித்ராந்வயாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ॥

புரட்டாசித் திருவோணத்தில் விச்வாமித்ர கோத்ரத்தில் அவதரித்த ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

पिता यस्याऽनन्तसूरिः पुण्डरीकाक्षयज्वनः ।
पौत्रो यः तनयः तोतारम्बायायास्तस्य मङ्गलम् ॥ ३ ॥

பிதா யஸ்யாநந்தஸூரி: புண்டரீகாக்ஷ யஜ்வன: ।
பௌத்ரோ ய: தநய: தோதாரம்பாயா: தஸ்ய மங்களம் ॥

அனந்தஸூரி தோதாரம்மை என்ற தம்பதிகளின் புத்ரரும், புண்டரீகாக்ஷ ஸோமயாஜியின் பௌத்ரருமான ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

वेङ्कटेशावतारोऽयं तद्घण्टांशोऽथवा भवेत् ।
यतीन्द्रांशोऽथवेत्येवं वितर्क्यायास्तु मङ्गलम् ॥ ४ ॥

வேங்கடேஶாவதாரோயம் தத்கண்டாம்சோதவா பவேத்
யதீந்த்ராம்சோதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம்

ஸாக்ஷாத் திருவேங்கடமுடையானின் அவதாரமென்றும்,

அவருடைய திருமணியின் அம்சமென்றும், யதிராஜனை எம்பெருமானுடைய அம்சமென்றும், பெரியோர்களால் கொண்டாடப்படும் ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

श्रीभाष्यकारः पन्थानं आत्मना दर्शितं पुनः ।
उद्धर्तुं आगतो नूनं इत्युक्तायास्तु मङ्गलम् ॥ ५ ॥

ஸ்ரீபாஷ்யகார: பந்தானம் ஆத்மனா தர்ஸிதம் புன: ।
உத்தர்தும் ஆகதோ நூனம் இத்யுக்தாயாஸ்து மங்களம் ॥

தம்மால் காட்டப்பட்ட ஸ்ரீ விசிஷ்டாத்வைத மார்க்கத்தை புனருத்தாரணம் பண்ணவந்த ஸ்ரீ பாஷ்யகாரரே இவர் என்று கூறப்பட்ட ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

यो बाल्ये वरदार्यस्य प्राचार्यस्य परां दयाम् ।
अवाप्य वृद्धिं गमितः तस्मै योग्याय मङ्गलम् ॥ ६ ॥

யோ பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் ।
அவாப்ய வ்ருத்திம் கமித: தஸ்மை யோக்யாய மங்களம் ॥

சிறுவயதிலேயே ப்ராசார்யரான நடாதூர் அம்மாள் எனப் படும் வாத்ஸ்ய வரதாசார்யரின் திருவருளுக்கு இலக்காகி அவராலே

प्रतिष्ठापितवेदान्तः प्रतिक्षिप्तबहिर्मतः ।
भूयाः त्रैविद्यमान्यस्त्वं भूरिकल्याणभाजनम् ॥

"(வேதாந்தங்களை நிலை நிறுத்தி புறச்சமயங்களை வேரறுத்து, வேதம் வல்ல பெரியோர்களால் கொண்டாடப்பட்டு நிறைந்த மங்களங்களை யடைவாய்)" என்று வாழ்த்தப்பட்டு அப்புள்ளாராலே உயர் நிலைக்குக் கொண்டுவரப்பட்ட ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

रामानुजार्यात् आत्रेयात् मातुलात् सकलाः कलाः ।
अवाप विंशत्यब्दे यः तस्मै प्राज्ञाय मङ्गलम् ॥ ७ ॥

ராமானுஜார்யாதாத்ரேயாத் மாதுலாத் ஸகலா: கலா: ।
அவாப விம்சத்யப்தே ய: தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் ॥

அம்மானுகிய கிடாம்பி அப்புள்ளாரிடமிருந்து இருபது வயதிற்குள் எல்லா கலைகளையும் கற்றுணர்ந்த அறிவாளர் ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

श्रुतप्रकाशिका भूमौ येनादौ परिरक्षिता ।
प्रवर्तिता च पात्रेषु तस्मै श्रेष्ठाय मङ्गलम् ॥ ८ ॥

ஶ்ருத ப்ரகாஶிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா ।
ப்ரவர்த்திதா ச பாத்ரேஷு தஸ்மை ச்ரேஷ்டாய மங்களம்

துருஷ்கர்களால் உபத்ரவம் வந்தபோது ஸுதர்சன பட்டர் அருளிச்செய்த "ச்ருதப்ரகாசிகை" என்ற ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யானத்தை ரக்ஷித்ததுமன்றி தக்கவர்கள் மூலம் பரவச் செய்த ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

सांस्कृतीभिः द्रामिडीभिः बह्वीभिः कृतिभिर्जनान् ।
यः समुज्जीवयामास तस्मै सेव्याय मङ्गलम् ॥ ९ ॥

ஸாம்ஸ்க்ருதீபி: த்ராமிடீபி: பஹ்வீபி: க்ருதிபி: ஜனன் ।
ய: ஸமுஜ்ஜீவயாமாஸ தஸ்மை ஸேவ்யாய மங்களம் ॥

வடமொழி தென்மொழிகளிலே அமைந்த பல நூல்களைக் கொண்டு ஜனங்களை உய்வித்தவரும் வணங்கத்தக்கவருமான ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

यः ख्यातिलाभपूजासु विमुखो वैष्णवे जने ।
क्रयणीयदशां प्राप्तः तस्मै भव्याय मङ्गलम् ॥ १० ॥

ய: க்யாதி லாப பூஜாஸு விமுகோ வைஷ்ணவே ஜனே ।
க்ரயணிய தசாம் ப்ராப்த: தஸ்மை பவ்யாய மங்களம் ॥

புகழ், லாபம், பெருமை, இவற்றை விரும்பாதவரும் ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் 'கேசவா புருடோத்தமாகிளர் சோதியாய் குறளா என்று பேசுவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே' என்றபடி தொண்டும் செய்யும் ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

यस्मादेव मया सर्वं शास्त्रं अग्राहि नान्यतः ।
तस्मै वेङ्कटनाथाय मम नाथाय मङ्गलम् ॥ ११ ॥

யஸ்மாதேவ மயா ஸர்வம் ஶாஸ்த்ரம் அக்ராஹி நான்யத:।
தஸ்மை வேங்கடநாதாய மம நாதாய மங்களம் ॥

எந்த தேசிகனிடமிருந்தே அடியேன் ஸகல சாஸ்திரங்களை யும் பயின்றேனோ அந்த என் நாதனான வேங்கடநாதனுக்கு மங்களம்.

पित्रे ब्रह्मोपदेष्ट्रे मे गुरवे दैवताय च ।
प्राप्याय प्रापकायास्तु वेङ्कटेशाय मङ्गलम् ॥ १२ ॥

பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச ।
ப்ராப்யாய ப்ராபகாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ॥

அடியேனுக்குத் தந்தையாய், காயத்ரியை உபதேசித்தவராய் ஞான நல்லாசிரியராய், தெய்வமாய், அடையப்படுபவராயும், அடைவிப்பவருமாயுமுள்ள வேங்கடேசன் என்ற திருநாமம் பூண்ட ஸ்ரீ தேசிகனுக்கு மங்களம்.

यः कृतं वरदार्येण वेदान्ताचार्य मङ्गलम् ।
आशास्तेऽनुदिनं सोऽपि भवेत् मङ्गलभाजनम् ॥ १३ ॥

ய: க்ருதம் வரதார்யேண வேதாந்தாசார்ய மங்களம் ।
ஆஶாஸ்தே அனுதினம் ஸோபி பவேத் மங்களபாஜனம் ॥

குமார வரதாசார்யரால் அருளிச் செய்யப்பட்ட இந்த ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய மங்களத்தைத் தினந்தோறும் ஆதரித்து ஓதும் அன்பரும் மங்களங்களை அடைவார்கள்.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

கவிதார்கிக ஸிம்ஹாய கல்யாணகுணஶாலினே ।
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்த குரவே நம: ॥

॥ श्रीः ॥

श्रीमते लक्ष्मीहयवदन परब्रह्मणे नमः ॥
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

(2)

॥ श्रीमद्वेदान्तदेशिक प्रार्थनाष्टकम् ॥

ஸ்ரீமத் வேதாந்த தேசிக ப்ரார்த்தனுஷ்டகம்

ஸ்ரீமத் வேதாந்த தேசிக ப்ரார்த்தனுஷ்டகம் என்ற 10 சுலோகங்களைக் கொண்ட இச்சிறு ஸ்தோத்ரமும் குமாரவரதாசார்யரால் அருளிச் செய்யப்பட்டது. இதில் தேசிகனிடத்தும், அவரடியாரிடத்தும் பக்தியை ப்ரார்த்தித்து ரஹஸ்யத்ரய ஸாரத்தில் கூறிய நிஷ்டையைத் தமக்கு அருளவேண்டும் என்கிறுர். பாகவதர்களிடத்து எந்த விதத்திலும் தமக்கு அபசாரம் ஏற்படாமல் இருக்கும்படி செய்ய வேண்டுமென்று வேண்டி, ஸ்ரீ தேசிகன் திருவடிகளே தமக்கு இங்கும் அங்கும் எங்கும் தஞ்சம் என்கிறுர். பலச்ருதிக்குப் பிறகு ஸ்ரீ தேசிகனுக்கு மங்களாசாஸனமாக அமைந்த ஒரு ச்லோகமும் இதில் உண்டு.

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किक केसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

श्रीमल्लक्ष्मणयोगीन्द्र सिद्धान्तविजयध्वजम् ।
विश्वामित्रकुलोद्भूतं, वरदार्यमहं भजे ॥

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே ॥

त्रयीचूडागुरो! स्वामिन्! कृपाम्भोराशिना त्वया ।
विज्ञापनं मामकीनं श्रोतव्यं श्रितवत्सल ॥ १ ॥

த்ரயீசூடாகுரோ! ஸ்வாமின்! க்ருபாம்போராஶிநா த்வயா
விஜ்ஞாபனம் மாமகீனம் ச்ரோதவ்யம் ச்ரிதவத்ஸல ॥

வேதாந்த குருவே! எம்பிரானே! கருணைக்கடலாகிய தேவரீர் அடியேன் செய்யும் விண்ணப்பமொன்று கேட்டருள வேண்டும். தன்னை யடைந்தவரிடம் அருள் கொண்டவரன்றோ தேவரீர்.

त्रय्यन्तार्य! भवत्पादपङ्केरुहजुषां सताम् ।
स्वयं मयि सदा भूयात् अनुग्रहपरंपरा ॥ २ ॥

த்ரய்யந்தார்ய! பவத்பாத பங்கேருஹஜுஷாம் ஸதாம் ।
ஸ்வயம் மயி ஸதா பூயாத் அனுக்ரஹ பரம்பரா ॥

வேதாந்தவாசிரியரே! தேவரீருடைய திருவடித்தாமரையை தஞ்சமாகப் பற்றின பெரியோர்களின் க்ருபை அடியேனிடத்தில் எப்பொழுதும் தானாகவே தோன்றவேண்டும்.

श्रीसंयमीन्द्रसिद्धान्तनिधिरक्षैकदीक्षित ।
नियतं कुरु दासं मां सर्वतन्त्रस्वतन्त्र ते ॥ ३ ॥

ஸ்ரீ ஸம்யமீந்த்ர ஸித்தாந்த நிதி ரக்ஷைகதீக்ஷித ।
நியதம் குரு தாஸம் மாம் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர தே ॥

யதிவரனார் ஸித்தாந்தமாம் மாநிதியைக் காப்பதிலேயே கருத்துடையோய்! ஸர்வ தந்த்ரஸ்வதந்திரரே! அடியேனை என்றும் அடிமையாக்கிக்கொள்ளவேண்டும்.

ज्ञानभक्त्यादिसत्संपत्प्रदायिन्याऽनुकम्पया ।
स्यादसाविति वीक्षस्व वेदान्ताचार्यवर्य माम् ॥ ४ ॥

ஜ்ஞானபக்த்யாதி ஸத்ஸம்பத்ப்ரதாயின்யாऽனுகம்பயா ।
ஸ்யாதஸாவிதி வீக்ஷஸ்வ வேதாந்தாசார்யவர்ய மாம் ॥

வேதாந்தவாசிரியரே! ஞானம் பக்தி முதலிய நற்செல்வங் களையளிக்கும் அருளாலே "ஆமுதல்வனிவன்" என்று அடியேனை நோக்கியருளவேண்டும்.

श्रीवेङ्कटेशघण्टात्मन्! यतीन्द्रशठजित्प्रिय ।
रहस्यत्रयसारोक्तनिष्ठां श्रेष्ठां प्रयच्छ मे ॥ ५ ॥

ஸ்ரீவேங்கடேஶ கண்டாத்மன் யதீந்த்ரஶடஜித் ப்ரிய I
ரஹஸ்யத்ரயஸாரோக்தநிஷ்டாம் ச்ரேஷ்டாம் ப்ரயச்ச மே

திருமலைமால் திருமணியாய் சிறக்கவந்தோய்! எம்பெருமா னுக்கும், நம்மாழ்வாருக்கும் பிரியமானவரே! ஸ்ரீமத் ரஹஸ் யத்ரய ஸாரத்தில் கூறப்பட்ட மிகச் சிறந்த நிஷ்டையை அடியேனுக்கு அருளவேண்டும்.

त्वत्कृतिष्वागमान्तार्य! सम्यक् कृतपरिश्रमैः ।
नित्ययोगो महाभागैः त्वदेकान्तिभिरस्तु नः ॥ ६ ॥

த்வத்க்ருதிஷ்வாகமாந்தார்ய! ஸம்யக் க்ருதபரிச்ரமை. I
நித்யயோகோ மஹாபாகை: த்வதேகாந்திபிரஸ்து ந: ||

மறைமுடித் தேசிகனே! தேவரீருடைய நூல்களை நன்கு கற்றவரும், தேவரீரையே தஞ்சமென்றிருப்பவருமாகிய பெரியோர்களின் சேர்க்கை அடியேனுக்கு என்றும் இருக்க வேண்டும்.

कदाचित्क्वापि केनापि कवितार्किकसिंह माम् ।
श्रीकान्ततत्पराचार्येषु अप्रसक्तागसं कुरु ॥ ७ ॥

கதாசித் க்வாபி கேநாபி கவிதார்கிகஸிம்ஹ! மாம் I
ஸ்ரீ காந்த தத்பராசார்யேஷு அப்ரஸக்தாகஸம் குரு ||

கவிவாதி சிங்கமே! எப்பொழுதும் எங்கும் எவ்விதத் திலும் அடியேனை எம்பெருமானிடத்திலும் அவனடியார்களான ஆசார்யர்களிடத்திலும் குற்றமிழைக்காதவனாகச் செய்தருள வேண்டும்.

श्रीमद्वेङ्कटनाथार्य! त्वदीयचरणद्वयम् ।
भवत्वत्र परत्रापि मदीयं शरणं सदा ॥ ८ ॥

ஸ்ரீமத் வேங்கடநாதார்ய! த்வதீய சரணத்வயம் ।
பவத்வத்ர பரத்ராபி மதீயம் ஶரணம் ஸதா ॥

திருவேங்கட நாதனென்னும் குருவே! தேவரீருடைய திருவடிகளிரண்டும் அடியேனுக்கு இந்நிலவுலகிலும் வானுலகிலும் புகலாக வேண்டும்.

सादरं व्याहरन्नेतत् प्रत्यहं प्रार्थनाष्टकम् ।
वेदान्ताचार्यपादाब्ज भक्तिरत्नाकरो भवेत् ॥ ९ ॥

ஸாதரம் வ்யாஹரன் ஏதத் ப்ரத்யஹம்
ப்ரார்த்தனஷ்டகம் ।
வேதாந்தாசார்ய பாதாப்ஜ பக்தி ரத்னகரோ பவேத் ॥

"ப்ரார்த்தனஷ்டகம்" என்ற எட்டு சுலோகங்கள் கொண்ட இந்நூலை அன்புடன் தினமும் சொல்பவர்கள் ஸ்ரீ தேசிகன் திருவடிகளில் நிலையான பக்தியைப் பெறுவார்கள்.

जयति श्रुतिचूडार्यः श्रीमान् अद्भुतचन्द्रमाः ।
सकला यत्र हि कलाः निर्मला नित्यपुष्कलाः ॥ १० ॥

ஜயதி ச்ருதிசூடார்ய: ஸ்ரீமான் அத்புத சந்த்ரமா: ।
ஸகலா யத்ரஹி கலா: நிர்மலா நித்ய புஷ்கலா: ॥

ஒப்பற்ற சந்திரன் போன்று வேதாந்தகுரு விளங்குகிறார். இவரையடைந்துள்ள கலைகள் என்றும் களங்கமின்றியும் நிறைந்தும் விளங்குகின்றன.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

கவிதார்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலினே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ॥

॥ श्रीः ॥

श्रीमते लक्ष्मीहयवदन परब्रह्मणे नमः ।
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।

(3)

॥ श्रीमद्वेदान्तदेशिकप्रपत्तिः ॥

ஸ்ரீமத் வேதாந்த தேசிக ப்ரபத்தி:

ஸ்ரீமத் வேதாந்த தேசிகப்ரபத்தி 10 சுலோகங்களைக் கொண்டது. இதனை அருளிச் செய்தவரும், ஸ்வாமி தேசிகனின் குமாரராகிய வரதாசார்யரே. ஸ்ரீ தேசிகனின் திருவடிகளின் பெருமையைப் பேச வந்தது இந்த ஸ்தோத்ரம். ஒவ்வொரு சுலோகத்தின் முடிவும்

'वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये'

என்று இருப்பது அனுஸந்தானம் செய்யும்போது இதன் இனிமையை அதிகமாக்குகிறது. வடமொழிக்கு உரித்தான ப்ராஸம் எனப்படும் எதுகை, மோனை நயங்களை இந்த ஸ்தோத்ரத்தில் காணலாம். இதனை அடியொற்றியே **वेङ्कटेशप्रपत्ति** முதலிய பல ஸ்தோத்ரங்கள் பிற்காலத்தில் தோன்றின.

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

श्रीमल्लक्ष्मणयोगीन्द्रसिद्धान्तविजयध्वजम् ।
विश्वामित्रकुलोद्भूतं वरदार्यमहं भजे ॥

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே ॥

"पित्रे ब्रह्मोपदेष्ट्रे मे गुरवे दैवताय च।
प्राप्याय प्रापकायास्तु वेङ्कटेशाय मङ्गलम्"॥

என்றபடி தமக்குத் தந்தையாய், காயத்ரியை உபதேசித்தவராய், ஆசார்யராய் தெய்வமாய் எல்லாமாயிருக்கும் ஸ்வாமி தேசிகன் திருவடிகளை குமாரவரதாசார்யர் இந்த ப்ரபந்த முகத்தாலே சரணமடைகிறார்.

विद्वन्मतङ्गजशिखाभरणायमानौ
विश्वातिशायिमहिमाम्बुनिधानभूतौ।
विद्वेषिवादिमकुटीकृतकुट्टनौ तौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ १ ॥

வித்வந்மதங்கஜஶிகாபரணாய மாநௌ
விஶ்வாதிஶாயி மஹிமாம்பு நிதான பூதௌ ।
வித்வேஷிவாதி மகுடீக்ருத குட்டநௌ தௌ
வேதாந்த ஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

சிறந்த வித்வான்களின் தலைக்கணியாய், எல்லாவற்றிலும் மேம்பட்ட பெருமைக் கடலாய், த்வேஷம் கொண்ட பர வாதிகளின் தலைகளில் குட்டுமதான ஸ்ரீ தேசிகன் திருவடிகளைச் சரணமடைகிறேன். முதலடியில் ஸௌலப்யமும் இரண்டாவது மூன்றாவது அடிகளில் பரத்வமும் பேசப்பட்டது.

विश्वम्भरां अतितरामपि भासयन्तौ
विन्यासतो विविधसज्जनतानुभाव्यौ।
विस्तारसंसृति महार्णव कर्णधारौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ २ ॥

விச்வம்பராம் அதிதராமபி பாஸயந்தௌ
விந்யாஸதோ விவித ஸஜ்ஜனதானுபாவ்யௌ ।
விஸ்தார ஸம்ஸ்ருதி மஹார்ணவ கர்ணதாரௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

தம்முடைய அடிவைப்புகளாலே பூமியை மிகவும் ப்ரகாசிக்கச் செய்கின்றனவாயும், நல்லோர் பலராலும் தாயாய், தந்தையாய் மற்றுமுள்ள சுற்றமுமாய் போற்றப்படுமவையாய், பரந்திட்டு நின்ற பிறவிக் கடலைக் கடத்தி எம்பெருமான் திருவடிகளை அடைவிக்கும் ஓடக்காரன் போன்ற ஸ்ரீ தேசிகன் திருவடிகளைச் சரணம் புகுகிறேன். இதனால் ப்ராப்யத்வமும் ப்ராபகத்வமும் சொல்லிற்று.

विश्वान्तरान्धतमसक्षपण प्रवीणौ
विद्योतमान नखरेन्दु मयूखजालैः ।
विख्यात तामरस शङ्खरथाङ्ग चिह्नौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ ३ ॥

விச்வாந்தராந்ததமஸ க்ஷபண ப்ரவீணௌ
வித்யோதமான நகரேந்து மயூகஜாலை: ।
விக்யாத தாமரஸ ஶங்க ரதாங்க சிந்ஹௌ
வேதாந்த ஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

ஒளிரும் நகங்களின் நிலவொளியாலே எல்லோருடைய உள்ளிருளையும் போக்குமதாய், உத்தமர்களின் லக்ஷணமாய் கூறப்பட்ட தாமரை, சங்கு சக்கரம் முதலியவற்றை யடையாள மாக உடைய ஸ்ரீ தேசிகன் திருவடிகளைச் சரணம் அடைகிறேன்.

विद्वेषमान मद मत्सर विद्विषौ यौ
विष्ण्वालयानुगमनोत्तमनित्यकृत्यौ ।
वेदान्तवृद्ध विहिताञ्जलिगोचरौ तौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ ४ ॥

வித்வேஷமான மத மத்ஸர வித்விஷௌ யௌ
விஷ்ண்வாலயாநுகமனோத்தமநித்யக்ருத்யௌ ।
வேதாந்தவ்ருத்த விஹிதாஞ்ஜலி கோசரௌ தௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

த்வேஷம், அஹங்காரம், குலம் முதலியவற்றால் ஏற்பட்ட

கர்வம், அசூயை முதலியவற்றைப் போக்குவனவாய், எம்பெருமானுடைய திருக்கோயில்களுக்குப் போவதையே சிறந்த பணியாய் கொண்டனவாய், அறிவிற் சிறந்த பெரியோர்களால் வணங்கப்படும் ஸ்ரீ தேசிகன் திருவடிகளை சரணம் புகுகிறேன்.

विष्ण्वर्पितात्मजन भाग्य विपाक भूतौ
विभ्राजमाननवकोकनदानुकल्पौ ।
वेषान्तरोपगतपल्लवतल्लजौ तौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ ५ ॥

விஷ்ண்வர்பிதாத்மஜன பாக்ய விபாக பூதௌ
விப்ராஜமான நவகோகநதானுகல்பௌ ।
வேஷாந்தரோபகத பல்லவதல்லஜௌ தௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

எம்பெருமானிடத்தில் பரந்யாஸம் பண்ணின பெரியோர்களின் பாக்கியத்தின் பலமாய் அமைந்தவையும், விளங்கும் செவ்வாம்பலைப் போன்றவையும், சிறந்த தளிரே வேற்றுருவம் கொண்டதோ என்னும்படியுள்ள ஸ்ரீ தேசிகன் திருவடிகளைத் தஞ்சமென்றடைகிறேன்.

वेधोमुखैरपि सुरैः विहितप्रणामौ
वेलातिलंघिसुषुमा सुकुमारभावौ ।
विस्मेरकेसरलसन्मृदुलांगुलीकौ
वेदान्तसुरिचरणौ शरणं प्रपद्ये ॥ ६ ॥

வேதோமுகைரபி ஸுரை: விஹிதப்ரணாமௌ
வேலாதிலங்கி ஸுஷுமா ஸுகுமார பாவௌ ।
விஸ்மேர கேஸர லஸந்ம்ருதுளாங்குலீகௌ
வேதாந்த ஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

'सर्वेऽस्मै देवा बलिमावहन्ति' என்கிறபடியே பிரமன் முதலான தேவர்களும் காணிக்கையிட்டுத் தொழுமவையாய்,

2623

எல்லையற்ற அழகும், மென்மையும் பொருந்தியவையாய், அழகிய கேசரங்கள்போல் விளங்கும் மெல்விரல்களையுடைய ஸ்ரீ தேசிகன் திருவடிகளிலே சரணம் புகுகிறேன்.

विद्रावितोद्भटविकाररजोगुणौ तौ
विख्यातभूरिविभवेन रजःकणेन ।
विश्वोपकारकरणाय कृतावतारौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ ७ ॥

வித்ராவிதோத்பட விகார ரஜோகுணௌ தௌ
விக்யாத பூரிவிபவேன ரஜ: கணேன ।
விச்வோபகார கரணாய க்ருதாவதாரௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

மிகப் பெருமை வாய்ந்த தம் (திருவடிகளின்) துகளாலே வெவ்வேறாய் மாறும் இயல்பினதாய ரஜோகுணத்தைப் போக்கடிப்பவையாய், உலகுய்யத்தோன்றியவையான ஸ்ரீ தேசிகன் திருவடிகளில் அடைக்கலம் புகுகிறேன்.

विष्ण्वंघ्रिनिर्गत सरित्प्रवरानुभाव्यौ
विद्याविनीत जनितैः विमलैः स्वतीर्थैः ।
व्यानम्रशिष्यजनरक्षण जागरूकौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ ८ ॥

விஷ்ண்வங்க்ரி நிர்கத ஸரித்ப்ரவரானுபாவ்யௌ
வித்யாவிநீத ஜநிதை: விமலை: ஸ்வதீர்த்தை: ।
வ்யாநம்ர சிஷ்யஜன ரக்ஷண ஜாகரூகௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

கல்வி பயின்றதால் வினயம் முதலிய குணங்களையுடைய சிஷ்யர்களாலே சேர்க்கப்பட்ட ஸ்ரீ பாத தீர்த்தத்தாலே எம்பெருமானின் திருவடியிலிருந்து தோன்றின கங்கையிற் புனிதமானவையும் வணங்கின சிஷ்யர்களைக் காப்பதில் கண்ணும் கருத்துமுடைய ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

वीथीषु रंगनगरे कृतचंक्रमौ तौ
विष्णूत्सवेषु विधिवासवसेवितेषु ।
विद्याविनीत जनता विहितानुसारौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ ९ ॥

வீதீஷு ரங்கநகரே க்ருதசங்க்ரமௌ தௌ
விஷ்ணூத்ஸவேஷு விதிவாஸவ ஸேவிதேஷு ।
வித்யாவிநீத ஜனதா விஹிதாநுஸாரௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

ஸ்ரீரங்க திவ்ய நகரத்தில் ப்ரம்மா இந்திரன் முதலியவர்கள் தொழ ஸ்ரீரங்கநாதன் திருவீதிகளில் எழுந்தருளும்போது அனுயாத்திரையாக எழுந்தருளுவனவும், கல்வி கேள்விகளால் வணக்கமுடைய பாகவதர்களால் பின்தொடரப்பட்டதுமான ஸ்ரீ தேசிகன் திருவடிகளை சரணடைகிறேன்.

विश्वासविष्णुपदभक्तिविरक्तिशून्यं
विभ्रष्टकृत्यमपि मां विषयेषु सक्तम् ।
विद्वत्सभानुगतियोग्यमिहादधानौ
वेदान्तसूरिचरणौ शरणं प्रपद्ये ॥ १० ॥

விச்வாஸவிஷ்ணுபதபக்தி விரக்தி ஶூன்யம்
விப்ரஷ்டக்ருத்யமபி மாம் விஷயேஷு ஸக்தம் ।
வித்வத்ஸபாநுகதியோக்யமிஹாததாநௌ
வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

மஹா விச்வாஸம், எம்பெருமானிடம் பக்தி, வைராக்யம் இவைகள் இல்லாதவனும், செய்யவேண்டியவைகளைச் செய்யாதவனும், சப்தாதி விஷயங்களில் ஈடுபட்டவனுமான அடியேனையும் வித்வான்களின் சபைக்கு போவதற்குத் தகுதியுள்ளவனுகச் செய்யும் ஸ்ரீ தேசிகனுடைய திருவடிகளைச் சரணம் அடைகிறேன்.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

கவிதார்கிக ஸிம்ஹாய கல்யாணகுணஶாலினே ।
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்த குரவே நம: ॥

॥ श्रीः ॥

श्रीमते लक्ष्मीहयवदन परब्रह्मणे नमः ॥
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

॥ श्रीमद्वेदान्तदेशिकदिनचर्या ॥

ஸ்ரீமத் வேதாந்த தேசிக தினசர்யா

சாண்டில்ய ஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகளிலும் பகவத் சாஸ்த்ரம் எனப்படும் ஸ்ரீ பாஞ்சராத்ரத்திலும் ப்ரபன்னன் வாழவேண்டிய வகை கூறப்பட்டுள்ளது. அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து வகையான கைங்கர்யங்களை நமக்கு விதித்திருக்கிறார்கள். இவற்றின்படியே நம்முடைய பூர்வாசார்யர்கள் அனுஷ்டித்தும் வந்துள்ளார்கள். இப்படிப்பட்ட ஆசார்யர்களைப் 'பஞ்சகால பராயணர்கள்' என்று சொல்வார்கள். குமார வரதாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீமத் வேதாந்த தேசிக தினசர்யா என்ற நூலில் அதிகாலையில் விழித்தெழுவது முதல் இரவு யோகம் முடிந்து மறுநாள் விழித்தெழுவதுவரை ஸ்வாமி தேசிகன் அனுஷ்டானம் 23 ஸ்லோகங்களில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

திருமழிசைப் பிரான் 'தெரித்து எழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது' என்று தாம் போது போக்கிய விதத்தை அருளிச் செய்தார். ஸ்வாமி தேசிகனுக்குப் புத்ரராயும் சிஷ்யராயும் இருந்து அந்தரங்க அடிமை செய்துவந்த குமாரர் இந்த ஸ்தோத்ரத்தில் ஸ்வாமியின் அனுஷ்டானத்தை வெளியிட்டார். பின்புள்ளாரும் ஸ்வாமி தேசிகனின் அனுஷ்டானத்தை அறிந்து அவ்வாறே ஒழுக வேண்டும் என்ற க்ருபையாலே இதனை அருளிச் செய்திருத்தல் வேண்டும்.

"यदीयचरितं सतां सुचरितव्यवस्थापकम्"

என்று அண்ணனும் இந்த தினசர்யையைக் கொண்டாடி இருக்கிறார். இதை அடியொற்றியே மாமுனிகள் விஷயமான தினசரியை அமைந்திருக்கின்றது.

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किक केसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

श्रीमल्लक्ष्मणयोगीन्द्रसिद्धान्तविजयध्वजम् ।
विश्वामित्रकुलोद्भूतं वरदार्यमहं भजे ॥

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விஸ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே ॥

काञ्चीपुरी यस्य हि जन्मभूमिः
विहारभूः वेङ्कटभूधरेन्द्रः ।
वासस्थली रङ्गपुरी तमीड्यं
श्रीवेंकटेशं गुरुमाश्रयामः ॥ १ ॥

காஞ்சீபுரீ யஸ்ய ஹி ஜன்ம பூமி:
விஹார பூ: வேங்கட பூதரேந்த்ர: ।
வாஸஸ்தலீ ரங்கபுரீ தமீட்யம்
ஸ்ரீ வேங்கடேஶம் குருமாச்ரயாம: ॥

காஞ்சியில் அவதரித்து வேங்கட மலையில் விளையாடி ஸ்ரீரங்கத்தில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீ வேங்கடேசன் என்ற குருவை வணங்குகிறோம்.

संभावना यस्य हि कालकूटः
सभा भुजङ्गी कुणपं तरुण्यः ।
स्यात् रौरवं राजगृहं स जीयात्
चिरं गुरुः वेंकटनाथनामा ॥ २ ॥

ஸம்பாவனா யஸ்ய ஹி காலகூட:
ஸபா புஜங்கீ குணபம் தருண்ய: ।

ஸ்யாத் ரௌரவம் ராஜக்ருஹம் ஸ ஜீயாத்
சிரம் குரு: வேங்கடநாத நாமா ॥

புகழ்ச்சியை கால கூட விஷம் என்றும் வீண்வாதம் நடக்கும் சபைகளைப் பாம்பென்றும், யுவதிகளைப் பிணம் என்றும் அரச மாளிகைகளை ரௌரவம் என்ற நரகம் என்றும் கருதும் வைராக்யம் மிகுந்த வேங்கடநாதனென்றும் திருநாமத்தையுடைய ஆசார்யருக்குப் பல்லாண்டு.

यः प्रातरभ्येत्य हरिं शुचीनि
द्रव्याण्युपादाय शुचिः कृतेज्यः ।
स्वाध्याययुक्तो निशि योगरूपां
निद्रां समारोहति तं नताः स्मः ॥ ३ ॥

ய: ப்ராதரப்யேத்ய ஹரிம் ஶுசீனி
த்ரவ்யாண்யுபாதாய ஶுசி: க்ருதேஜ்ய: ।
ஸ்வாத்யாய யுக்தோ நிஶி யோகரூபாம்
நித்ராம் ஸமாரோஹதி தம் நதா: ஸ்ம: ॥

காலை அபிகமனத்தையும், பிறகு பரிசுத்தமான த்ரவ்யங்களை சம்பாதித்து இஜ்யையும் செய்து ஸ்வாத்யாயத்தோடு கூடியவராய் இரவில் யோக நித்ரையை அடையும் ஆசார்யரை வணங்குகிறோம். இந்த ச்லோகத்தில் அபிகமனம், உபாதானம், இஜ்யை ஸ்வாத்யாயம் யோகம் என்ற ஐந்து காலங்களிலும் ப்ரபன்னனுக்குச் செய்யவேண்டுவதாய், விதிக்கப்பட்டவைகளை ஸ்வாமி தேசிகன் அனுஷ்டிக்கிறார் என்று சொல்லப்பட்டது. *

---

* அவையாவன 1 ப்ரதிதினமும் ஆத்ம குணங்கள் வளர்வதன் பொருட்டு எம்பெருமானிடம் விநயத்துடன் சென்று சரணாகதி செய்வது, 2 பகவதாராதனத்துக்குத் தேவையான பொருள்களையும் அறிவையும் சேகரித்து வருவது, 3 எம்பெருமானை ஆறு ஆஸனங்களில் எழுந்தருளச் செய்து ஆராதிப்பது, 4 பகவத் பக்தி வளர ஸாத்விக புராணங்களை அநுஸந்தானம் செய்வது, 5 ஸ்வாமியான பகவானை நித்திரை வரும் வரை த்யானிப்பது என்பவையாம்,

यामे तुरीये यतन्नाग्रजन्याः
विहाय शय्यां विहिताङ्घ्रिशुद्धिः ।
योऽत्यादरेणाऽऽस्थितयोगशेषः
तं वेङ्कटेशं गुरुमाश्रयामः ॥ ४ ॥

யாமே துரீயே யதவாக் ரஜன்யா:
விஹாய ஶய்யாம் விஹிதாங்க்ரி ஶுத்தி: ।
யோऽத்யாதரேண ஆஸ்தித யோக ஶேஷ:
தம் வேங்கடேஶம் குரும் ஆஶ்ரயாம: ॥

இரவின் நான்காவது யாமத்தில் படுக்கையை விட்டெழுந்து திருவடிகளை சோதித்துக் கொண்டு உள்ளன்புடன் யோகத்தை முடிக்கும் வேங்கடேச குருவை அடைகிறோம்.

ततोऽनुसंधाय ततिं गुरूणां
तं चापि देवं रमणं रमायाः ।
तत्कालयोग्यानि तथाविधानि
हृद्यानि पद्यानि पठन्तं ईडे ॥ ५ ॥

ததோऽநு ஸந்தாய ததிம் குரூணாம்
தம் சாபி தேவம் ரமணம் ரமாயா: ।
தத்கால்யோக்யானி ததாவிதானி
ஹ்ருத்யானி பத்யானி படந்தம் ஈடே ॥

பிறகு குரு பரம்பரையையும் திருமாமகள் கேள்வன் விஷயமான ப்ாசுரங்களையும் உஷ: காலத்துக்கேற்ற அதுபோன்றமற்ற இனியபாசுரங்களையும் அனுஸந்திக்கும் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.

उत्थाय गेहात् उपगम्य रम्यां
कवेरकन्यां कलिताङ्घ्रिशुद्धिः ।
ततो विशुद्ध्याप्सु निमज्ज्य शुभ्रं
वस्त्रं वसानं तमहं स्मरामि ॥ ६ ॥

உத்தாய கேஹாத் உபகம்ய ரம்யாம்
கவேரகன்யாம் கலிதாங்க்ரி சுத்தி: ।
ததோ விஸ்ருத்யாப்ஸு நிமஜ்ய ஸுப்ரம்
வஸ்த்ரம் வஸானம் தமஹம் ஸ்மராமி ॥

பிறகு எழுந்து திருமாளிகையிலிருந்து காவிரிக்குப் போய் திருவடிகளைச் சோதித்து குடைந்து நீராடி வெண்மையான வஸ்த்ரம் தரிக்கும் ஸ்ரீ தேசிகனை நினைக்கிறேன்.

धृत्वोर्ध्वपुण्ड्राणि सरोजबीज-
मालां अवन्ध्यां समुपास्य सन्ध्याम् ।
सावित्रं ईशं सवितुः त्वथर्चा
स्तुवन्तं एकान्तधिया स्तुवे तम् ॥ ७ ॥

த்ருத்வோர்த்வ புண்ட்ராணி ஸரோஜ பீஜ
மாலாமவந்த்யாம் ஸமுபாஸ்ய ஸந்த்யாம் ।
ஸாவித்ரம் ஈசம் ஸவிது: த்வதர்சா
ஸ்துவந்தம் ஏகாந்ததியா ஸ்துவே தம் ॥

திருமண் காப்புகளையும் துளசி நளினாக்ஷ மாலைகளையும் சாற்றிக்கொண்டு ஸ்ந்த்யோபாஸனம் செய்து ஒன்றிய மனத்தினோடு காயத்ரீ மஹா மந்திரத்தால் ஸூர்ய மண்டலாந்தர் வர்த்தியான எம்பெருமானைத் துதிக்கும் ஸ்ரீ தேசிகனை அடியேன் துதிக்கிறேன்.

ततश्च पौर्वाह्णिकनित्यकर्म
निर्वर्त्य नित्येष्ट निवृत्तिमार्गः ।
श्रीरङ्गधामोपसमेत्य सेवा-
क्रमेण रङ्गेश्वरपादमूलम् ॥ ८ ॥

ததஸ்ச பௌர்வாண்ஹிக நித்யகர்ம
நிர்வர்த்ய நித்யேஷ்ட நிவ்ருத்தி மார்க: ।

ஸ்ரீரங்கதாமோபஸமேத்ய ஸேவா
க்ரமேண ரங்கேச்வர பாதமூலம் ॥

பிறகு முற்பகலில் செய்யவேண்டிய நித்ய கர்மங்களைச் செய்து மோக்ஷ மார்க்கத்தையே விரும்பியவராய் பெரிய கோயிலில் முறைப்படி சென்று பெரிய பெருமாள் திருவடிகளில் வணங்கி நிற்பர் நம் தேசிகோத்தமன்.

प्राबोधिकीभिः प्रतिबोध्य गीर्भिः
प्रसाद्य तद्गद्यमुखैः प्रबन्धैः ।
आशास्य तन्मंगलं आप्तवाक्यैः
आपादचूडं कलयन्तं ईडे ॥ ९ ॥

ப்ராபோதிகீபி: ப்ரதிபோத்ய கீர்பி:
ப்ரஸாத்ய தத்கத்யமுகை: ப்ரபந்தை: ।
ஆஶாஸ்ய தன்மங்களம் ஆப்தவாக்யை:
ஆபாதசூடம் கலயந்தம் ஈடே ॥

திருப்பள்ளியெழுச்சி பாடி எம்பெருமானை எழுப்பி எம்பெருமானார் அருளிச்செய்த ஸ்ரீரங்க கத்யம் முதலிய ப்ரபந்தங்களால் எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணி ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளாலே எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடித் திருவடி முதல் திருமுடி அளவாகச் சேவிக்கும் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.

तीर्थप्रसादादिकं अत्र लब्ध्वा
विज्ञाप्य देवाय ततो विसृष्टः ।
शनैः उपेत्य आश्रमकल्पं आत्म-
गेहं सुखासीनं अहं स्मरामि ॥ १० ॥

தீர்த்த ப்ரஸாதாதிகம் அத்ர லப்த்வா
விஜ்ஞாப்ய தேவாய ததோ விஸ்ருஷ்ட: ।
ஶனை: உபேத்ய ஆஶ்ரமகல்பம் ஆத்ம
கேஹம் ஸுகாஸீனம் அஹம் ஸ்மராமி ॥

பெரியபெருமாள் ஸந்நிதியில் தீர்த்தப் ப்ரஸாதங்களை பெற்று எம்பெருமானிடம் விண்ணப்பித்து அனுமதி பெற்று ஆசிரமம் போன்ற தம் திருமாளிகைக்கு மெள்ள எழுந்தருளிச் சுகமாக விற்றிருக்கும் ஸ்ரீ தேசிகனை நினைக்கிறேன்.

व्याख्यानशालां उपगम्य चाथो
शिष्यान् अनन्यान् श्रवणाभिमुख्यान् ।
संग्राहयन्तं सकलानि तन्त्राणि
अतन्द्रितं तं गुरुं आश्रयेऽहम् ॥ ११ ॥

வ்யாக்யான ஶாலாம் உபகம்ய சாதோ
ஶிஷ்யான் அனந்யான் ஶ்ரவணாபிமுக்யான் ।
ஸங்க்ராஹயந்தம் ஸகலானி தந்த்ராணி
அதந்த்ரிதம் தம் குரும் ஆஶ்ரயேऽஹம் ॥

பிறகு காலக்ஷேப கூடத்திற்கு எழுந்தருளி வேறொருவரை ஆச்ரயிப்பதிலே விருப்பமில்லாத சுச்ருஷுக்களான சிஷ்யர்களுக்கு ஸகல சாஸ்திரங்களையும் உபதேசிக்கும் சோம்பலில்லாத ஆசார்ய ஸார்வ பௌமரை வணங்குகிறேன்.

ताः संस्कृतद्राविडदिव्यसूक्तीः
प्रसन्नगंभीरतया प्रसिद्धाः ।
तत्तद्रुचिभ्यः तनयाविशेषं
प्रणौमि दान्तं प्रतिपादयन्तम् ॥ १२ ॥

தா: ஸம்ஸ்க்ருத த்ராவிட திவ்யஸூக்தீ:
ப்ரஸந்ந கம்பீரதயா ப்ரஸித்தா: ।
தத்தத் ருசிப்ய: தனயாவிஶேஷம்
ப்ரணௌமி தாந்தம் ப்ரதிபாதயந்தம் ॥

தெளிவும் ஆழமும் நிறைந்த வடமொழி தென்மொழிகளிலே அமைந்த திவ்ய ஸூக்திகளைச் சிஷ்யர்களின் ருசிக்குத் தக்கபடி தன் புத்திரர்கள் போன்று வாத்ஸல்யத்துடன் உபதேசிக்கும் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.

शिष्यैः उपादानपरैः अनन्यैः
समर्पितं भक्तिपुरस्सरं यत् ।
तेनैव शुद्धेन यथोचितेन
तुष्यन्तं ईडे तुषतुल्यरुक्मम् ॥ १३ ॥

ஶிஷ்யை: உபாதாநபரை: அனந்யை:
ஸமர்பிதம் பக்திபுரஸ்ஸரம் யத் ।
தேநைவ ஶுத்தேன யதோசிதேன
துஷ்யந்தம் ஈடே துஷதுல்யருக்மம் ॥

மாறாத பக்தி கொண்டவர்களும் உபாதானத்தைக் கைக்கொண்டவர்களுமான சிஷ்யர்களாலே பக்தியோடு ஸமர்ப்பிக்கப்பட்ட சுத்தமான த்ரவ்யங்களைக் கொண்டே த்ருப்தியடையும் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன். உமியையும் தங்கத்தையும் ஒன்றாகக் கருதும் வைராக்ய நிதியன்றோ ஸ்ரீ தேசிகன்?

इत्थं ह्युपादाय च शास्त्रशिक्षां
तां चाप्युपादानपदे निवेश्य ।
माध्याह्निकं कर्म समाप्य पश्चात्
वन्दे यजन्तं वरदं सदारम् ॥ १४ ॥

இத்தம் ஹ்யுபாதாய ச ஶாஸ்த்ர ஶிக்ஷாம்
தாம் சாப்யுபாதாநபதே நிவேஶ்ய ।
மாத்யாஹ்னிகம் கர்ம ஸமாப்ய பஶ்சாத்
வந்தே யஜந்தம் வரதம் ஸதாரம் ॥

இவ்வாறு சாஸ்த்ர ப்ரவசனத்தைச் செய்து அதையே உபாதானமாகக் கருதி மாத்யான்னிகத்தை முடித்து இஜ்யையிலே பெருந்தேவி மணாளனை பேரருளாளனை ஆராதிக்கும் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.

अतस्करग्राह्यपवित्रपात्रैः
अनिन्द्रियोन्मादकरैः हविर्भिः ।

आराध्य देवं कमलासहायं
आराधये तं विहितानुयागम् ॥ १५ ॥

அதஸ்கரக்ராஹ்ய பவித்ரபாத்ரை:
அநிந்த்ரியோந்மாதகரை: ஹவிர்பி: ।
ஆராத்ய தேவம் கமலாஸஹாயம்
ஆராதயே தம் விஹிதாநுயாகம் ॥

திருடர்கள் கொண்டு செல்ல முடியாத எளிய பரிசுத்தமான பாத்திரங்களாலும் இந்திரியங்களைத் தூண்டி விடாதனவான ஹவிஸ்ஸுகளாலும் திருமகள் கேள்வனைப் பூசித்து அந்த ப்ரஸாதத்தைக்கொண்டு அனுயாகம் செய்யும் (உண்ணும்) ஸ்ரீ தேசிகனை பூஜிக்கிறேன்.

यामे चतुर्थे निहतारिवर्गं
प्रबन्धनिर्माणविलोकनाद्यैः ।
तथा पुराणाद्यवलोकनैश्च
कालं क्षिपन्तं कलये गुरुं तम् ॥ १६ ॥

யாமே சதுர்த்தே நிஹதாரிவர்கம்
ப்ரபந்த நிர்மாண விலோகநாத்யை: ।
ததா புராணாத்யவலோகனைஶ்ச
காலம் க்ஷிபந்தம் கலயே குரும் தம் ॥

(பகலின்) நான்காவது யாமத்தில் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளைச் சேவித்தும், தாம் ப்ரபந்தங்களை நிர்மாணித்தும் புராணங்கள் முதலியவற்றைப் பார்த்தும் போது போக்கும் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.

सायन्तनं कर्म समाप्य पश्चात्
समेत्य च श्रीवरदाह्वयस्य ।
सहान्तरङ्गैः कुलदैवतस्य
समीपं आरात् प्रणतं स्मरामि ॥ १७ ॥

ஸாயந்தனம் கர்ம ஸமாப்ய பஶ்சாத்
ஸமேத்ய ச ஸ்ரீவரதாஹ்வயஸ்ய ॥
ஸஹாந்தரங்கை: குலதைவதஸ்ய
ஸமீபம் ஆராத் ப்ரணதம் ஸ்மராமி ॥

சாயங்காலத்தில் செய்யவேண்டிய நித்ய கர்மங்களை முடித்து அந்தரங்கர்களான சிஷ்யர்களுடன் கூட குலதெய்வமான தேவப் பெருமாளைச் சேவித்து நிற்கும் ஸ்ரீ தேசிகனை நினைக்கிறேன்.

आशास्य तन्मङ्गलं अच्युतस्य
तत्तत्प्रबन्धैश्च तदीयपंक्तिम् ।
स्तुत्वैकतानं प्रतिगृह्य तीर्थ-
प्रसादं एनं कृतकृत्यं ईडे ॥ १८ ॥

ஆஶாஸ்ய தன்மங்களம் அச்யுதஸ்ய
தத்தத் ப்ரபந்தைஶ்ச ததீயபங்க்திம் ।
ஸ்துத்வைகதானம் ப்ரதிக்ருஹ்ய தீர்த்த
ப்ரஸாதம் ஏனம் க்ருதக்ருத்யம் ஈடே ॥

அந்தந்த எம்பெருமான் விஷயங்களான ப்ரபந்தங்களால் எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடி அவனடியார்களான ஆழ்வார் ஆசார்யர்களையும் துதித்து தீர்த்தப் ப்ரஸாதங்களை ஸ்வீகரித்து க்ருத க்ருத்யரான ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.

अथान्तरङ्गैः उपदेवगेहं
अध्यास्य पीठं सरसैः वचोभिः ।
तेषां सुसूक्ष्मार्थविशेषशिक्षां
कुर्वाणं ईडीमहि वेङ्कटेशम् ॥ १९ ॥

அதாந்தரங்கை: உபதேவ கேஹம்
அத்யாஸ்ய பீடம் ஸரஸை: வசோபி: ।
தேஷாம் ஸுஸூக்ஷ்மார்த்த விசேஷ ஶிக்ஷாம்
குர்வாணம் ஈடீமஹி வேங்கடேஶம் ॥

பிறகு எம்பெருமான் ஸந்நிதிக்குப் பக்கத்தில் பீடத்தில்

அமர்ந்து ரஸம் நிரம்பிய தம் வார்த்தைகளாலே விசேஷார்த்தங்களையும் ஸூக்ஷ்மமான அர்த்தங்களையும் உபதேசிக்கும் வேங்கடேசன் என்ற திருநாமமுடைய ஸ்ரீ தேசிகனை வணங்குகிறோம்.

शिष्यान् अनुज्ञाप्य सुसूक्ष्मबुद्धीन्
कृतप्रणामान् कृपया गृहेभ्यः ।
अध्यास्य शुद्धं शयनीयं अत्र
योगाय सन्नद्धं अहं स्मरामि ॥ २० ॥

ஶிஷ்யான் அனுஜ்ஞாப்ய ஸுஸூக்ஷ்மபுத்தீன்
க்ருத ப்ரணாமான் க்ருபயா க்ருஹேப்ய:।
அத்யாஸ்ய ஶுத்தம் ஶயநீயம் அத்ர
யோகாய ஸந்நத்தம் அஹம் ஸ்மராமி ॥

வணங்கின ஸூக்ஷ்ம புத்தியுள்ள சிஷ்யர்களை தம்தம் க்ருஹங்களுக்குப் போகும்படி நியமித்துப் பரிசுத்தமான படுக்கையில் அமர்ந்து யோகத்தைச் செய்யப்புகும் ஸ்ரீ தேசிகனை நினைக்கிறேன்.

हृत्पुण्डरीके वरदं सदारं
निवेश्य तत्पादसरोजयुग्मे ।
आबद्धचित्तं सुसुखं शयानं
आराधये देशिकं अस्मदीयम् ॥ २१ ॥

ஹ்ருத்புண்டரீகே வரதம் ஸதாரம்
நிவேஶ்ய தத்பாதஸரோஜயுக்மே।
ஆபத்தசித்தம் ஸுஸுகம் ஶயானம்
ஆராதயே தேசிகம் அஸ்மதீயம் ॥

இதய கமலத்தில் பேரருளாளனையும் பெருந்தேவியையும் நிறுத்தி அவர்கள் திருவடித் தாமரைகளிலே மனதை வைத்துச் சுகமாகப் படுத்திருக்கும் அடியோங்கள் ஆசிரியரை வணங்குகிறேன்.

योगस्वरूपां अनुभूय निद्रां
यामे तुरीये प्रतिबुद्धय भूयः ।

स्वस्वामिभावाकलनात्मयोगं
भजे भजन्तं गुरुवेङ्कटेशम् ॥ २२ ॥

யோகஸ்வருபாம் அனுபூய நித்ராம்
யாமே துரீயே ப்ரதிபுத்ய பூய: ।
ஸ்வஸ்வாமி பாவாகலனாத்ம யோகம்
பஜே பஜந்தம் குருவேங்கடேஶம் ॥

யோகருபமான நித்திரையை அனுபவித்து மறுபடியும் நான்காவது யாமத்தில் விழித்து "நாராயணன் பரன் நாமவனுக்கு அடியோம்" என்ற நினைப்போடிருக்கும் ஸ்ரீ வேங்கடேச குருவை வணங்குகிறேன்.

इत्येवं एतां इह सर्वतन्त्र-
स्वतन्त्रवेदान्तगुरूत्तमस्य ।
नित्याभिजप्यां शुभनित्यचर्यां
जपन्ति ये ते दुरितं तरन्ति ॥ २३ ॥

இத்யேவம் ஏதாம் இஹ ஸர்வதந்த்ர
ஸ்வதந்த்ர வேதாந்த குரூத்தமஸ்ய ।
நித்யாபிஜப்யாம் ஶுபநித்ய சர்யாம்
ஜபந்தி யே தே துரிதம் தரந்தி ॥

ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரான வேதாந்த குருவின் சுபமான தினசர்யையை எவர்கள் தினமும் மந்திரம் போலே ஜபிப்பார்களோ அவர்கள் பாவங்களைக் கடக்கிறார்கள்.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

கவிதார்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலினே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ॥

॥ श्रीः ॥

श्रीमते लक्ष्मीहयवदन परब्रह्मणे नमः ।
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।

(5)

॥ श्रीमद्वेदान्त देशिक विग्रहध्यानम् ॥

"चिग्रहालोकनपरः तस्य चाज्ञाप्रतीक्षकः"
என்றபடி ஆசார்யர்களுடைய திவ்ய மங்கள விக்ரஹங்களும் ஸச்சிஷ்யர்களின் த்யானத்திற்கு விஷயம் என்பது பெரியோர்கள் வகுத்த வழி. பின்புள்ளாரும் மந்தமதிகளான நம் போன்றவர்களும் ஸ்வாமி தேசிகனின் திருவுருவை த்யானிக்க வழி செய்யவே இந்த ஸ்தோத்ரம் அவதரித்தது போலும். தேவர்களை வர்ணிக்கும்போது திருவடி தொடங்கி திருமுடியளவாக வர்ணிப்பது கவிமரபு. தேசிகனையன்றி தேவு மற்றறியாத குமார வரதாசார்யர் அதே முறையில் ஸ்வாமி தேசிகனை 15 சுலோகங்களால் வர்ணித்துள்ளார். முதலில் ஸமுதாயசோபையையும் பிறகு ஒவ்வொரு அவயவ சோபையையும் கடைசியில் ஸர்வாவயவங்களையும் சேர்த்து ஒரு சுலோகத்திலும் வர்ணித்து தம் மனதில் என்றும் ஆசார்ய ஸார்வபௌமனின் திருவுருவம் பதிந்து நிற்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

श्रीमल्लक्ष्मणयोगीन्द्र सिद्धान्तविजयध्वजम् ।
विश्वामित्रकुलोद्भूतं वरदार्यमहं भजे ॥

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே ॥

मनःप्रसूनस्तबकं मदीयं
नाथस्य कौतूहलं आतनोतु ।
बिभर्ति यो भागवतेषु सर्व-
तन्त्रस्वतन्त्रेषु (न्त्रोऽपि?) च पारतन्त्र्यम् ॥

மன:ப்ரஸூனஸ்தபகம் மதீயம்
நாதஸ்ய கௌதூஹலம் ஆதனோது ।
பிபர்த்தி யோ பாகவதேஷு ஸர்வ
தந்த்ரஸ்வதந்த்ரேஷு (ந்த்ரோபி)ச பாரதந்த்ர்யம் ॥

தாம் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராயிருக்கச் செய்தே அடியார்கள் பக்கலில் பரதந்த்ரரான என்னுதன் வேங்கடநாதனுக்கு அடியேனுடைய மனமாகிற பூங்கொத்து மகிழ்ச்சி யூட்டட்டும்.

श्रीवादिहंसांबुद देशिकेन्द्र
पादांबुज द्वन्द्व परागदैवम् ।
श्रीवेङ्कटेशं गुरुसार्वभौमं
चेतश्चिरं भावय सौम्यरूपम् ॥ २ ॥

ஸ்ரீவாதி ஹம்ஸாம்புத தேசிகேந்த்ர
பாதாம்புஜ த்வந்த்வ பராகதைவம் ।
ஸ்ரீ வேங்கடேசம் குருஸார்வபௌமம்
சேதஶ்சிரம் பாவய ஸௌம்யரூபம் ॥

கிடாம்பிக்குலபதி அப்புள்ளார் தம் இணையடித்தாமரையைத் தெய்வமாககொண்டவரும் அழகிய ருபமுள்ள ஸ்ரீ வேங்கடேசன் எனப்படும் ஆசிரிய வள்ளலே, மனமே, என்றும் சிந்தித்திரு.

श्रीमत्त्रयीशेखर देशिकस्य
श्रीवेङ्कटेशस्य वपुः मनोज्ञम् ।
आदित्यवर्णं विशदं ममाक्ष्णोः
आपादचूडापदं आविरस्तु ॥ ३ ॥

ஸ்ரீமத் த்ரயீஶேகர தேசிகஸ்ய
ஸ்ரீவேங்கடேஶஸ்ய வபு: மனோஜ்ஞம் ।
ஆதித்ய வர்ணம் விஶதம் மமாக்ஷ்ணோ:
ஆபாத சூடாபதம் ஆவிரஸ்து ॥

சாகாந்த தேசிகனும் தூப்புல் திரு வேங்கடேச குருவின் சூரியனின் நிறம் போன்ற நிறத்தினையுடைய அழகிய திருமேனி திருவடி முதல் திருமுடியளவாகத் தெளிவாக அடியேன் கண்களில் தோற்ற வேண்டும்.

निर्निद्रपङ्केरुहयुग्मशोभा-
निराकृतिप्रौढपदाब्जयुग्मम् ।
नीरन्ध्र निर्यन्नखचन्द्रचन्द्रा-
तपस्फुटद्-ध्यातृहृदन्धकारम् ॥ ४ ॥

நிர்நித்ர பங்கேருஹ யுக்ம ஶோபா
நிராக்ருதி ப்ரௌட பதாப்ஜ யுக்மம் ।
நீரந்த்ர நிர்யந்நகசந்த்ர சந்த்ரா-
தப ஸ்புடத்த்யாத்ரு ஹ்ருதந்தகாரம் ॥

(அவர்) குவியாத தாமரை மலர்களிரண்டின் அழகைத் தோற்பிக்கும் பெருமை படைத்த இணையடித்தாமரையோன். இடையின்றிப் பெருகும் நகங்களாகிற சந்திரனின் ஒளியால் நினைப்பவரின் நெஞ்சத்திருளைப் போக்குபவர்.

निजार्धचन्द्रोपमितालकोद्यन्
निरन्तरोद्भासि सितोर्ध्वपुण्ड्रम् ।
सितायतस्वच्छसरोजबन्धं
मुनेः शठारेरिव मूर्तिभेदम् ॥ ५ ॥

நிஜார்த்த சந்த்ரோபமிதாலகோத்யந்
நிரந்த ரோத்பாஸி ஸிதோர்த்வ புண்ட்ரம் ।
ஸிதாயத ஸ்வச்ச ஸரோஜபந்தம்
முனே: ஶடாரேரிவ மூர்த்திபேதம் ॥

(அவர்) திவ்யாளக பங்க்தியாகிற ராத்திரியோடே சேர்ந்த அஷ்டமீ சந்திரன் போன்ற திருநெற்றியிலே, எப்பொழுதும் விளங்கும் வெண்மையான திருமண் காப்பினையுடையவர் வெளுத்தும் நீண்டும் உள்ள மயிர் முடியினையுடையவர். ஆகையாலே, நம்மாழ்வாரின் மற்றொரு மூர்த்தியோ என்று எண்ணத்தக்கவர்.

मुखेन्द्वधः पाति करोत्कराकृति-
स्फुटच्छविश्मश्रुपरिष्कृतोरसम् ।
सितोपवीतं तुलसीसरोरुह-
अक्षमालिकालंकृतचारुकन्धरम् ॥ ६ ॥

முகேந்த்வத: பாதி கரோத்கராக்ருதி
ஸ்புடச்சவி ஶ்மஶ்ரு பரிஷ்க்ருதோரஸம் ।
ஸிதோபவீதம் துளஸீ ஸரோருஹ-
அக்ஷமாலிகாலங்க்ருத சாரு கந்தரம் ॥

(அவர்) முகமாகிற சந்திரனினும் கீழ் நோக்கி விழும் கிரணங்கள் போன்ற வெண்மையான தாடியினால் அழகு நிரம்பிய திருமார்பினர். வெண்புரி நூலினர். துளசி, தாமரை மணிகளாலே அலங்கரிக்கப்பட்ட கழுத்தினர்.

अनङ्ग सौवर्ण निषङ्गकान्ति-
प्रसंगभंगावह चारुजङ्घम् ।
लसत् ककुद्मत् ककुदाभिरूप्य-
नितान्तनिर्भासितजानुयुग्मम् ॥ ७ ॥

அனங்க ஸௌவர்ண நிஷங்ககாந்தி
ப்ரஸங்க பங்காவஹசாரு ஜங்கம் ।
லஸத் ககுத்மத் ககுதாபிரூப்ய
நிதாந்த நிர்பாஸித ஜாநுயுக்மம் ॥

(அவர்) மன்மதனுடைய பொன் மயமான அம்பறாத் தூணியின் அழகு பற்றிய பேச்சை எடுக்காது செய்யும் அழகிய

கணைக்கால்களையுடையவர். எருதின் அழகிய முசுப்புப்போல் மிகவும் விளங்கும் இரு முழந்தாள்களையுடையவர்.

रम्भावरस्तम्भ विजृम्भमाण
दुर्गर्वसर्वंकष सक्थि दृश्यम् ।
कटीतटश्लिष्टपवित्रशुभ्रा-
(अ)न्तरीयनिर्भासि नितम्बबिम्बम् ॥ ८ ॥

ரம்பாவரஸ்தம்ப விஜ்ரும்பமாண
துர்கர்வ ஸர்வங்கஷ ஸக்தி த்ருஶ்யம் ।
கடீதட ஶ்லிஷ்ட பவித்ர ஶுப்ரா
(அ)ந்தரீய நிர்பாஸி நிதம்ப பிம்பம் ॥

(அவர்) தன் அழகிய உருவத்தின் காரணமாக வீண் கர்வம் கொண்ட வாழைமரத்தின் அடிப்பகுதியின் கர்வத்தை அடியோடு போக்கும் குறங்களினால் (தொடைகளினால்) ரமணீயமானவர். இடுப்பில் சுற்றிய பரிசுத்தமான வெள்ளை வஸ்திரத்தினால் விளங்கும் அரையையுடையவர்.

आवर्तगर्तोज्वल नाभि चक्रं
अत्यायतोरस्थलदीप्यमानम् ।
आजानु लम्ब्यायत वृत्त बाहुं
अत्युन्नतांसं श्रितगूढजत्रुम् ॥ ९ ॥

ஆவர்த்த கர்தோஜ்வல நாபி சக்ரம்
அத்யாயதோ ரஸ்தல தீப்யமானம் ।
ஆஜாநு லம்ப்யாயத வ்ருத்த பாஹும்
அத்யுன்னதாம்ஸம் ஶ்ரித கூடஜத்ரும் ॥

நீர்ச்சுழல் போன்று ஆழ்மான திருநாபியை உடையவர், மிகவும் அகன்ற மார்பினர், முழந்தாளளவும் நீண்ட உருண்டு திரண்ட தோளினர். உயர்ந்த தோள்களையும் மறைந்த கழுத்தெலும்புகளையும் உடையவர்.

शङ्खप्रतिस्पर्धिसुजातकण्ठं
शान्तोपमानायितकर्णपाशम् ।
सुस्निग्धबद्धस्मितचूतपोत
नव्यप्रवालोपमिताधरोष्ठम् ॥ १० ॥

ஶங்க ப்ரதிஸ்பர்தி ஸுஜாத கண்டம்
ஶாந்தோபமாநாயித கர்ணபாஶம் ।
ஸுஸ்நிக்த பத்தஸ்மித சூதபோத
நவ்ய ப்ரவாளோபமிதாதரோஷ்டம் ॥

(அவர்) சங்கத்தைத் தோற்பிக்கும் அழகிய திருக்கழுத்தை உடையவர். ஒப்பொன்றில்லாத திருக்காதுகளையுடையவர் ப்ரீதியுடன் கூடியமைந்த மந்தஹாஸமும் நன்கு வளர்ந்த மாங்கன்றின் புதிய தளிர்கள்போன்ற திருப்பவளத்தையும் உடையவர்.

सुनिर्मलोदञ्चितमौक्तिकाली-
जडीकृतप्रौढिमदन्तपंक्तिम् ।
विकासिनासापुटकान्तिशान्त-
प्रफुल्लतिल्यप्रसवावलेपम् ॥ ११ ॥

ஸுநிர்மலோதஞ்சிதமௌக்திகாலீ
ஜடீக்ருத ப்ரௌடிம தந்த பங்க்திம் ।
விகாஸி நாஸாபுட காந்தி ஶாந்த
ப்ரபுல்ல தில்ய ப்ரஸவாவலேபம் ॥

அழுக்கற்ற நல்ல முத்துக்களின் வரிசையையும் தோற்பிக்கும் திருமுத்து வரிசை (பற்களை) உடையவர். மலர்ந்த எள்ளுப்பூவின் கர்வத்தைப் போக்கடிக்கும் அழகிய நாசியினை (மூக்கை) உடையவர்.

नासालसत् कल्पलता प्रसून-
युगायिताम्भोरुहचारुनेत्रम् ।

तत्सौरभाघ्राणविनिश्चलालि-
द्वयोपमभ्रूयुगलाभिरामम् ॥ १२ ॥

நாஸாலஸத் கல்பலதா ப்ரஸூன-
யுகாயிதாம்போருஹ சாரு நேத்ரம் ।
தத் ஸௌரபாக்ராண விநிஸ்சலாலி-
த்வயோபம ப்ரூயுகலாபிராமம் ॥

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தம்முடைய தளர்ந்த பிராயத்திலே க்ஷௌரம் செய்து கொள்ளாமல் இருந்தார் என்று இதன் மூலம் தெரிகிறது. குமாரர் தாம்நேரில் சேவித்தபடி ஸ்ரீ தேசிகனின் திருமேனி அமைப்பை வர்ணிக்கிறார்.

सुजात चरणांबुजं सुदृढगुल्फजानूरुकं
सितान्तरकटीतटं सुभगनाभिवक्षोगलम् ।
सुदीर्घयुगबाहुकं शुभकपोलनासाक्षिकं
मनोरुचिरमालिकं कलय वेङ्कटेशं गुरुम् ॥ १३ ॥

ஸுஜாத சரணாம்புஜம் ஸுத்ருடகுல்ப ஜாநூருகம்
ஸிதாந்தர கடீதடம் ஸுபகநாபி வக்ஷோகளம் ।
ஸுதீர்கயுக பாஹுகம் ஶுபகபோல நாஸாக்ஷிகம்
மனோருசிர மாலிகம் கலய வேங்கடேஶம் குரும் ॥

தாமரை போன்ற அழகிய திருவடிகளையும் த்ருடமான கணைக் கால்கள், முழந்தாள்கள் தொடைகளையும் வெண்மையான திருப் பரிவட்டம் சாற்றின இடையையும் அழகிய நாபி, மார்பு, கழுத்து களையும், மிகவும் நீண்ட இருகைகளையும் அழகிய கன்னங்கள் மூக்கு, கண்களையும் மனதிற்கு ரம்யமான துளசி நளினாக்ஷமாலை களையும் உடைய திருவேங்கட நாதனென்னும் குருவை துதி. இந்த ச்லோகத்தில் திருவடி முதல் திருமுடியீறாக வர்ணித் துள்ளது.

रथांगजलजांकितः सुललितोर्ध्वपुण्ड्रोज्ज्वलः
सरोजतुलसीमणिग्रथितमालिकाभूषणः ।

सितांशुकयुगांचितः स्मितमुखो दयाशीतलः
चकास्तु हृदि मे सदा स गुरुवेङ्कटाधीश्वरः ॥

ரதாங்கஜலஜாங்கித: ஊலலிதோர்த்வ புண்ட்ரோஜ்வல:
ஸரோஜ துளஸீமணிக்ரதித மாலிகா பூஷண: ।
ஸிதாம்ஶுக யுகாஞ்சித: ஸ்மிதமுகோ தயாஶீதல:
சகாஸ்து ஹ்ருதி மே ஸதா ஸ குருவேங்கடாதீச்வர: ॥

திருவிலச்சனை பெற்றவரும் அழகிய திருமண் காப்புகளால் விளங்குபவரும், துளசி, தாமரைமணிகளால் செய்த மாலையை அணியாக உடையவரும், வெண்மையான திருப்பரிவட்டங்களை அணிந்தவரும், புன்சிரிப்போடு கூடிய திருமுக மண்டலமுடையவரும் குளிர்ந்த தயையுடையவருமான திருவேங்கட நாதன் என்னும் குரு அடியேன் மனதில் எப்போதும் பிரகாசிக்க வேண்டும்.

य इमां दिनचर्यां च विग्रहध्यानपद्धतिम् ।
वरदार्यकृतां भक्त्या शीलयेत् मुक्त एव सः ॥ १५ ॥

ய இமாம் தினசர்யாம் ச விக்ரஹத்யானபத்ததிம் ।
வரதார்யக்ருதாம் பக்த்யா ஶீலயேத் முக்த ஏவ ஸ: ॥

வரதாசார்யரால் அருளிச் செய்யப்பட்ட "தினசர்யா" "விக்ரஹத்யானம்" என்ற நூல்களை பக்தியுடன் அனுஸந்திப்பவர்கள் மோஷானந்தத்தை இங்கேயே பெறுவர்.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

ஸ்ரீரஸ்து

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பிள்ளையந்தாதி

இப்பிரபந்தம் ஸ்வாமி தேசிகனுடைய திருக்குமாரராகிய நயினராசாரியர் எனப்படும் குமார வரதாசாரியர் அருளியது. எம்பெருமானிடத்திற்போல ஆசார்யர்களிடமும் ஈடுபடுதல் அவசியம் என்பதை வேதங்களும் ஸ்மிருதி இதிகாச புராணங்களும் அறுதியிட்டுக்கூறும். மதுரகவிகள் முதலிய சான்றோர் செயலிலும் இதைக்காணலாம் நம்மாழ்வார் விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பையும் எம்பெருமானார் விஷயமான இராமாநுச நூற்றந்தாதியையும் நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் வகை தொகையில் கணக்கிட்டுப் போந்தார்கள் நம் பூர்வர்கள். அதுபோலவே ஸ்வாமி தேசிகன் விஷயமாக குமாரவரதாசாரியர் அருளிய பிள்ளையந்தாதியும் தேசிகப்ரபந்தத்துடன் சேர்த்து அநுஸந்திக்கப்படலாயிற்று.

கட்டளைக்கலித்துறையில் அமைந்த 20 பாசுரங்களைக் கொண்டது இந்நூல் இதிலே கூறப்பட்ட விஷயங்களாவன. ஸ்ரீ தேசிகன் புகழைப்பாடினலன்றி உய்ய முடியாது. நூல்களை ஆராய்ந்து அவர்கண்ட முடிவே நமக்கு உய்யும் வழி. மண்மேல் நின்றநோய்கள் தவிர்க்க வேங்கடத்தண்ணலே தூப்புல் வள்ளலாகத் தோன்றினன். ஸ்ரீ தேசிகனைப்பற்றினால் தீவினைகள் அகலும். அவரிடத்து பக்தியையும் அவரே நமக்கு அருள வேண்டும் என்பனவாகும்.

தனியன்

சீரார் தூப்புல் பிள்ளையந்தாதியென்னும் செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக்கீழ் மொழிந்தான்
ஏரார் மறைப் பொருளெல்லாம் எடுத்து இவ்வுலகுய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே.

இவ்வுலகெலாம் உய்யவேண்டும் என்பதற்காக வேதங்களின் நுண்பொருள்களை ஆய்ந்தெடுத்து வளமிக்க தமிழ் மொழியாலே

வேதாந்த தேசிகனுடைய இணையடிக்கீழ் பிள்ளையந்தாதி என்ற நூலை அருளிச்செய்த குமார வரதாசாரியருடைய திருவடிகள் நமக்குத் துணையாகும்.

"சீரார் திருவெழுகூற்றிருக்கை யென்னும் செந்தமிழால்" என்கிற தனியனை அடியொற்றியது இத்தனியன்.

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்து உறை மார்பினன் தாள்
தூமலர் சூடிய தொல்லாள் மாறன் துணையடிக்கீழ்
வாழ்வையுகக்குமி ராமானுச முனி வண்மை போற்றும்
சீர்மையன் எங்கள் தூப்புல் பிள்ளைபாதம் என் சென்னியதே

அலர்மேல்மங்கை அகலகில்லேன் என்று உறையும் திரு மார்பினன் எம்பெருமான். அவன் துயரறு சுடரடியைச்சூடி நிற்பவர் நம்மாழ்வார். அவர் திருவடிகளே தஞ்சமென்று இருப்பவர் எம்பெருமானர். எம்பெருமானரது வள்ளல் தன்மையை என்றும் ஏத்தி நிற்பவர் தூப்புல் அம்மான். அவரது திருவடிகள் என்தலை மேலவே.

இப்பாசுரத்தில் திவ்ய தம்பதிகள், ஆழ்வார் எம்பெருமானருடைய சம்பந்தம் கூறப்பட்டது. "பூமன்னு மாது" என்று தொடங்கும் இராமாநுச நூற்றந்தாதியின் முதற் பாசுரத்தை இப்பாசுரத்துடன் ஒப்பு நோக்கவும்.

சென்னி வணங்கச் சிறுபனிசோர என் கண்ணிணைகள்
வெந்நரகங்களும் வீப வியன் கதி இன்ப மேவ
துன்னுபுகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த்தாள்
மன்னிய நாள்களுமாகுங்கொல் மாநிலத்தீர் நமக்கே.

பரந்த நிலவுலகில் வாழும் பேறு பெற்றோர்களே! தூப்புல் அம்மான் திருவடிகள் எக்காலத்திலும் நம் சிரஸிலே பொருந்தி இருக்கும் நன்னாள் நமக்கு வாய்க்குமோ? அவர் திருவடிகளில் வணங்கி ஆநந்தக் கண்ணீர் பெருக நிற்போமோ? இதனால் கொடிய நரகங்கள் அழிந்து மோக்ஷானந்தத்தையும் பெறலாம்.

ஸ்ரீ தேசிகன் திருவடி சம்பந்தமே நமக்கு இம்மை மறுமைப் பயன்களைத் தரவல்லது என்று இப்பாசுரத்தில் கூறுகிறார். கீழ்ப் பாசுரத்தில் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே' என்று

ப்ரார்த்தித்த திருவடி சம்பந்தம் ஸித்யமாக இருக்கவேண்டும் என்று இப்பாசுரத்தில் ப்ரார்த்திக்கிறார்.

மா நிலத்தோதிய மாமறை மன்னிய நற்கலைகள்
ஆனவை செப்பும் அரும்பொருளத்தனையே அருளும்
தூநெறிகாட்டும் இராமாநுச முனி தோத்திரம் செய்
ஊனமில் தூப்புல் ஐயன் ஓர் புகழன்றி உய்வில்லையே.

எம்பெருமானார் புகழ்பாடும் குறையற்ற தூப்புல் அம்மான் புகழ்பாடுவதன்றி வேறு உய்யும் வழியில்லை. அனைவருக்கும் ஹிதத்தையே வெளியிடும் வேதங்களையும், அவ்வேதங்களின் பொருளையுட்கொண்ட பற்பல சாஸ்திரங்களின் நுண்பொருளையும் உலகுக்கு வெளியிட்டதன்றி, தன்னில் ஒரு தோஷகந்தமுமில்லாத சரணாகதி மார்க்கத்தையும் ப்ரவர்த்தித்தவர் அன்றோ நம் தேசிகன். அத்தேசிகனே நமக்குத் தஞ்சம்.

உய்யும் வகையில்லை உத்தரவேதியுள் வந்துதித்த
செய்யவள் மேவிய சீரருளாளரைச் சிந்தை செய்யும்
மெய்யவன் எந்தை யிராமாநுசன் அருள் மேவிவாழும்
ஐயன் இலங்கு தூப்புல் பிள்ளை யாய்ந்த பொருளன்றியே.

அயன் செய்த அயமேத வேள்வியின் உத்தரவேதியில் தோன்றிய பெருந்தேவி மணாளன் பேரருளாளனையே எப்பொழுதும் சிந்தித்திருக்கும் இராமாநுசனது அருளையே நோக்கியிருக்கும் தூப்புலம்மான் ஆராய்ந்து அருளிய அர்த்தங்களே ஸாரமாகும். அவையே நாம் கடைதேற வழியாகும்.

अनन्तपारं बहु वेदितव्यं अल्पश्च कालो बहवश्च विघ्नाः ।
यत्सारभूतं तदुपाददीत हंसो यथा क्षीरमिवांबुमिश्रम् ॥

(கற்கவேண்டியதோ அளவிறந்தது, கிடைக்கும் காலமும் கொஞ்சம். கிடைத்த காலத்திலும் தடைகள் பல. ஆதலால் அன்னப்பறவை நீர் கலந்த பாலிலிருந்து பாலைமட்டும் எடுத்துக் கொள்வதுபோல் நாமும் ஸாரமானவற்றையே கைக்கொள்ள வேண்டும்) என்றபடி நமக்கு வேண்டிய ஸாரமான பொருள்களை பற்பல நூல்களினின்றும் எடுத்து அருளியவர் ஸ்வாமி தேசிகன். அந்த மஹோபகாரத்தை நினைத்து இட்டது இப்பாசுரம். இராமாநுசன் அருள் மேவி வாழும் ஐயன் என்ற சொற்றொடர்

வடமொழியில் रामानुजदयापात्रं என்றதை அடியொற்றி அவதரித்தது என்று பெரியோர் பணிப்பர்.

அன்று இவ்வுலகினையாக்கி அரும்பொருள் நூல் விரித்து
நின்று தன் நீள்புகழ் வேங்கட மாமலைமேவிப் பின்னும்
வென்றிப்புகழ் திருவேங்கட நாதனென்னும் குருவாய்
நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே.

எம்பெருமான் சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்கச் செய்தவை பல. அவற்றுள் முதன்மையாக இவ்வுலகைப்படைத்தான். கரணகளேபரங்களைத் தந்தான். சேதனன் உபாயங்களை அறிய வேண்டும் என்பதற்காக வேதம் முதலான சாஸ்திரங்களை ப்ரவர்த்திப்பித்தான். பின்னும் விண்ணவரும் மண்ணவரும் விரும்பிக்காணவேண்டி ஸர்வ ஸுலபனாய் திருவேங்கடமலையிலே அர்ச்சா ரூபியாய் எழுந்தருளினான். ஆகிலும் அந்த வேங்கடத் தெம்பெருமான் தேசிகனாய் அவதரித்த பின்பே உலகம் உய்ந்தது. பிறவி என்னும் பெருநோய் நீங்கியது. எம்பெருமானுடைய அவதாரங்களில் காட்டில் சேதனர்களின் உஜ்ஜீவன விஷயத்தில் தேசிகன் அவதாரம் மேம்பட்டது என்றாராயிற்று. அமுதனாரும் நம் இராமானுச நூற்றந்தாதியில் 'மண்மிசையோனிகள் தோறும் பிறந்து' என்ற பாசுரத்தில் ஆசார்யவைபவத்தையே அருளிச் செய்தார்.

வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்
மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன்கலைகள்
மொய்த்திடுநாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்
கைத்தவனென்றுரைத்தேன் கண்டிலேன் என் கடுவினையே.

எல்லாவிதங்களிலும் ஸமர்த்தர், வேதங்களின் பொருளை நன்குணர்ந்தவர், வேதாந்தவாசிரியர், அடியோங்கள் செய்த தவத்தின் பயனாய் தூப்புலில் அவதரித்தவர், எல்லோரினும் மேம் பட்டவர். திருவேங்கடநாதன் என்னும் பெயர் பூண்டவர் பற்பல கலைகளும் தங்கிநிற்கும் தம்முடைய நாவின் கர்ஜனையாலே ப்ரதி வாதிகளை வேரறக்களையும்படி கலக்கக்கற்றவர். என்றிவ்வாறு ஸ்ரீதேசிகனுடைய குணங்களையும் திருநாமங்களையும் சொன்னேன் என்ன ஆச்சர்யம்! கொடிய என் பாவங்கள் அடியோடு மறைந்து விட்டன. என்னே ஸ்ரீதேசிகனின் வைபவமிருப்பது.

இவ்வாறே அமுதனாரும் எம்பெருமானாரின் திருநாம வைபவம் இருக்கும்படியை "சுரக்தும் திருவும் உணர்வும்" என்ற பாசுரத்திலே அருளிச் செய்தார்.

வினைகாள் உமக்கு இனிவேறோர் இடந் தேடவேண்டும்
எனைச்
சினமேவி முன்போல் சிதைக்கும் வகையிங்கரிது கண்டீர்
எனெனில் இராமானுசமுனி இன்னுரை சேரும் தூப்புல்
புனிதர் என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே

எம்பெருமானாருடைய திவ்ய சூக்திகளைத் தம் உள்ளத்தே கொண்ட தூப்புல் வள்ளல் என் நெஞ்சிலே நித்ய வாஸம் பண்ணப் புகுந்தார். ஆகையால் பாபங்களே! நீங்கள் கோபங் கொண்டு முன்போல் துன்புறுத்த முடியாது. ஆகையால் நீங்கள் வாழ்வதற்கு வேறோர் இடம் தேடவேண்டும்.

கீழ் பாசுரத்தில் "கண்டிலேன் என் கடுவினையே" என்று கூறியவர் இப்பாசுரத்தில் பாவங்களை விளித்துப் பேசுவதால் இவை இனிமேல் புகவிருக்கும் பாவங்கள் என்று கொள்ள வேண்டும். ஆண்டாளும் "போய பிழையும் புகுதருவான் நின்றனவும்" என்று பாவங்களை இருவகையாக்கிப் பேசினாள். பெரியாழ்வாரும் நெய்க்குடத்தைப் பற்றி என்ற பதிகத்தில் இதையே அருளிச் செய்தார்.

பொருந்திப் புவிதனில் பொய்வாழ்க்கை பூண்கின்ற
பூரியர்காள்
இருந்து நரகினிடர் கெடமாற்றம் அறிகின்றிலீர்
பொருந்தும் பொருள் ஒன்று கேளீர் பொங்குமிவ்
விடர்கடற்கு
வருந்ாது தூப்புல் மாபூருடன் பாதம் வணங்குமினே.

பூவுலக வாழ்க்கை நிலையற்றது. இருந்தும் அதனை விடுவதில்லை நாம். இந்த நிலவுலகமே கர்மபூமி எனப்படும் இங்கு இருக்கும்போது நல்ல செயல்களைச் செய்து நரகத்துன்பங்கள் நம்மை அணுகாவண்ணம் செய்யலாம். ஆனால் அதற்கு உரிய வழியை நாம் அறிவதில்லை. சம்சாரமாகிற கடலை சிரமமில்லாமல் கடப்பதற்கு தூப்புலில் அவதரித்த ஸ்ரீ தேசிகன் திருவடிகளை

வணங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால் ஸ்ரீ தேசிகன் திருவடிகளை வணங்குங்கள். வணங்குவதால் நரக பயம் நீங்குவதோடு பிறவிக் கடலையும் கடக்கலாம்.

வணக்கம் ஒடுக்கம் வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும்
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் இகந்து நிற்கும்
குணக்குலமோங்கும் இராமானுசன் குணம் கூறும் தூப்புல்
அணுக்கனைப் பிள்ளைதனை அரணாக அடைபவர்க்கே

குணக்கடலாம் பெரும்பூதூர் வந்த வள்ளல் பெருமைகளைப் பேசும் தூப்புலில் தோன்றிய பரமபாகவதரான ஸ்ரீ தேசிகனைச் சரணமடைபவர்களுக்குப் பணிவு, அடக்கம், நல்ல பழக்கங்கள், நல்ல ஆசாரம், தயை முதலிய நற்குணங்கள் தாமே வந்தடையும். துஷ்டர்களின் ஸகவாசம், தூக்கமாகிற அஞ்ஞானம், பலவகைக் குற்றங்கள், அசுத்தம் முதலிய தீய குணங்கள் விலகிப்போகும். ஆகையால் ஸ்ரீ தேசிகனைச் சரணடையுங்கள்.

அமுதனர் தம்முடைய இராமானுச நூற்றந்தாதியில் எம்பெருமானரை அடைபவர்களுக்கு "பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல திருந்திய ஞானமும் செல்வமும் சேரும்" என்ருர். அந்த பாசுரத்தை அடியொற்றியே இந்த பாசுரம் அமைந்ததென்னலாம். ஆனல் பிள்ளையந்தாதியில் சொல்லப்பட்ட குணங்கள் யாவும் ப்ரபன்னனுக்கு வேண்டியவை என்பது உற்று நோக்கத் தக்கது.

அடைபவர் தீவினை மாற்றி அருள் தரும் தூப்புல் ஐய!
இடர்தரும் இப்பிறவிக் கடல் தன்னில் அமர்ந்தவென்னை
கடையறப் பாசங் கழற்றி நின் தாளிணைக் காணும் வண்ணம்
உடையவனே அருளாய் உணர்ந்தார் தங்கள் கற்பகமே

தம்மைச் சரண் அடைந்தவர்களின் பாபங்களைப் போக்கி அவர்களுக்கு அருள் புரியும் அம்மானே! கற்றவர் காமுறும் கற்பகமே! துன்பத்தையே தருகின்ற பிறவிக் கடலில் அமிழ்ந்து தத்தளிக்கும் அடியேனுடைய சம்சார பந்தம் வேரறச் செய்து தேவரீருடைய திருவடிகளைக் காணும்படி அருள் செய்யவேண்டும்.

கற்பகமேயென்று காசினியோரைக் கதிக்கமாட்டேன்
வெற்பிடையே நின்று வெந்த அத்தீயிலும் மேவமாட்டேன்
பற்பல் கலைவல்ல பாவலனே பத்தா ஏத்தும் தூப்புல்
அற்புதனே அருளாய் அடியேனுக்கு அரும்பொருளே

பற்பல கலைகளிலும் தேர்ந்த கவியரசே! தொண்டர் கொண்டாடும் தூப்புல் அற்புதனே! பொருளுக்காக நிலத்தில் வாழும் மானிடரை கற்பகம் என்று கூறமாட்டேன். சுவர்க்கம் முதலிய அற்ப பலன்களைப் பெறுவதற்காக மலைமீது நின்று தவம் செய்யவும் மாட்டேன். அடியேனுக்கு வேண்டியது மோக்ஷம் ஒன்றே. அவ்வரும் பொருளை அடியேனுக்கு தேவரீரே அருள வேண்டும்.

பொருளானது ஒன்றும் என்னில் பொருந்தாது
அதுவன்றி அந்தோ
மருளே மிகுந்து மறையவர் நல்வழி மாற்றிநின்றேன்
தெருளார் மறைமுடித் தேசிகனே எங்கள் தூப்புல்தேவே
அருளாய் இனிஎனக்கு உன்னருளேயன்றி ஆறில்லையே

ஞானம் மிகுந்த வேதாந்த தேசிகனே! தூப்புலில் எங்களுக்காகத் தோன்றிய தெய்வமே! நல்ல கதியை அடைவதற்கு வேண்டிய உபாயங்கள் ஒன்றையும் அடியேன் செய்யவில்லை. அஞ்ஞானத்தின் மிகுதியால் வேதம் வல்ல பெரியோர்களின் மார்க்கத்திற்கு எதிரானவற்றையே செய்தேன் ஐயோ! இனி தேவரீர் க்ருபையைத் தவிர அடியேனுக்கு வேறு உபாயம் இல்லை. ஆகையால் தேவரீரே அருள் புரியவேண்டும்.

ஆருக எண்ணும் அருங்கருமம் ஞானம் காதல் கொண்டு
வேருக நிற்கும் விரகு எனக்கு இல்லை விரத்தி இல்லை
தேருது திண்மதி சீரார்கதியிலும் செம்பொன்மேனி
மாருத தூப்புல்மாலே மறவேன் இனி நின்பதமே

என்றும் அழகு குன்றாத, செம்பொன் போன்ற திருமேனியை உடைய எங்கள் தூப்புல் குல தெய்வமே! இனி தேவரீர் திருவடிகளை மறக்கமாட்டேன். இதைத் தவிர மோக்ஷத்தைத் தரும் வேறு உபாயம் அடியேனிடம் இல்லை. கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் என்பவை

சாஸ்த்திரங்களில் மோக்ஷத்திற்கு உபாயமாகச் சொல்லப் பட்டவை. அவற்றைக் கைக்கொண்டு தனித்து நிற்கும் தகுதி அடியேனுக்கு இல்லை. எந்த பயனையும் கருதாத விரக்தியும் இல்லை. பல வகையிலும் சிறந்த உபாயமான ப்ரபத்திக்கு வேண்டிய மஹா விச்வாசமும் அடியேனிடம் இல்லை. ஆகையால் தேவரீர் திருவடிகள் ஒன்றே அடியேனுக்குத் தஞ்சம்.

நின்பதம் தன்னிலும் நேரே எனக்கில்லை அன்பு கண்டாய்
நின்பதம் ஒன்றிய அன்பரிலும் நேசமில்லை அந்தோ
என்படிகண்டு இனி என்பயன் ஏதமில் தூப்புல் எந்தாய்
உன்படியே அருளாய் உதவாய் எனக்கு உன் அருளே

குற்றமற்ற தூப்புல் அம்மானே! தேவரீர் திருவடிகளில் நேரிடையான அன்பு அடியேனுக்கு இல்லை. தேவரீர் திருவடி களில் ஈடுபாடு கொண்ட பெரியோர்களிடமும் அடியேனுக்குப் பக்தி இல்லை. ஆகையால் அடியேனுடைய இயல்பைக் கண்டு என்னபயன்? தேவரீருடைய தன்மைக்குத் தக்கவாறு அருள் புரியவேண்டும். தேவரீருடைய க்ருபையை அடியேனுக்கு அருளவேண்டும். தேவரே ஸித்தோபாயமாயும் இருத்தல் வேண்டும்

உன்னருள் அன்றி எனக்கு ஒரு நற்றுணை இன்மையினுல்
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதம் கருதி
மன்னிய நல்திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே
பொன்னருளால் அருளாய் புகழ் தூப்புல் குலவிளக்கே

புகழ் பெற்ற தூப்புல் குலத்திற்கு தீபம் போன்றவரே! தேவரீருடைய க்ருபையைத் தவிர அடியேனுக்கு வேறு ஒரு உபாயமில்லை. ஆகையால் அடியேனுடைய ஹிதத்தை தேவரீரே சிந்தை செய்து புண்ய பாபங்களாகிற இருவினைகளையும் விலக்கி அருளவேண்டும். திருவஷ்டாக்ஷரத்தில் கூறிய ஸ்வரூப, உபாய, புருஷார்த்த நிஷ்டைகளை அடியேன் பெற்று உய்யுமாறு அருள் புரியவேண்டும்.

விளக்காகி வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள்
வளக்காதல் கொண்டு உறைமார்பன் திறத்தும் உனதடியார்
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணி
களக்காதல் செய்யும் நிலைகடியாய் தூப்புல் காவலனே

அடியோங்களை உய்விக்க தூப்புலில் தோன்றியவரே! அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பன் திருவேங்கடவனிடத்திலும், தேவரீரிடத்தில் கலங்காத பக்தியுள்ள அடியார்களிடமும் கபடமற்ற பக்தியை அடியேனுக்கு அருளவேண்டும்.

இப்பாசுரத்தில் பகவத் பக்தியோடு ஆசார்ய பக்தியும் சேர்த்து வேண்டப்பட்டது.

காவலன் எங்கள் கிடாம்பிக் குலபதி அப்புளார் தம்
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து அவர்தம் அருளால்
நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பி
காவல தூப்புல் குலத்தரசே எம்மைக் காத்தருளே

தூப்புல் குலத் தலைவராய்த் தோன்றி அனைவரையும் காக்கும் ஸ்ரீ தேசிகனே! அடியோங்களுக்கு ரக்ஷகராயும் கிடாம்பி எனப் படும் வம்சத் தலைவரான ஆத்ரேய ராமானுஜாசாரியர் திருவடி களிலே ஆச்ரயித்து அவருடைய அனுக்ரஹத்தாலே இருமொழி வேதங்களின் உட்பொருளை உணர்ந்தவரே! அடியோங்களைக் காக்கவேண்டும்.

அருள் தரும் ஆரண தேசிகனே எங்கள் தூப்புல் தேவே
வரு கவிதார்க்கிக சிங்கமே வாதியர் வாழ்வறுத்தாய்
இருகையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய்
உருவ எனக்கருளாய் எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே

அடைந்தவர்கட்கு அருள் புரியும் வேதாந்த தேசிகனே! தூப்புலில் தோன்றிய எங்கள் தெய்வமே! கவிதார்க்கிக சிங்கமே புறச் சமயிகளை ஒறுத்தவனே! இரு கைகளையும் குவித்து அடியேன் செய்யும் விண்ணப்பம் ஒன்றைக் கேட்டு அருள வேண்டும் தேவரீர் திருவடிகளிலே மண்டின மனத்தினரிடம் அடியேன் மனம் என்றும் ஈடுபடுதல் வேண்டும்.

அமுதனாரும் இராமானுச நூற்றந்தாதியில் "உன் தொண்டர் கட்கே அன்புற்று இருக்கும்படி என்னை ஆக்கி அங்கு ஆட்படுத்தே" என்று ப்ரார்த்தித்தார்,

தொண்டருக்கும் துணையடி வாழி நின் தூமுறுவல்
கொண்டமுகம் வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண் திருநாமமும் வாழி மணிவட முப்புரிநூல்
கொண்ட சீர் தூப்புல் குலமணியே வாழி நின்வடிவே

'विग्रहालोकनपरः' என்றபடி ஆசார்யர்களுடைய திருமேனியும் சிஷ்யர்களின் த்யானத்திற்கு அவசியமானது என்ற சாஸ்திரத்திற்கு இணங்க இப்பாசுரத்தில் ஸ்ரீ தேசிகனுடைய வடிவுக்கு மங்களாசாஸனம் செய்கிருர். அடியார்கள் மிக விரும்பும் ஸ்ரீ தேசிகனின் திருவடிகள் வாழி, எப்பொழுதும் புன்முறுவல் பூத்த திருமுகமண்டலம் வாழி, வியாக்யான முத்திரையுடன் கூடிய திருக்கை வாழி, திருமேனியில் அணிந்த திருமண்காப்புகளும் திருமணித் தாழ்வடங்களும் யக்ஞோபவீதமும் வாழி. இவையெல்லாம் கொண்ட திவ்ய மங்கள விக்ரஹம் வாழி.

வடிவழகார்ந்த வண் தூப்புல் வள்ளல் மென்மலரடிமேல்
அடியவரோத அந்தாதி இருபதும் ஆய்ந்து உரைத்தேன்
திடமுடன் இதைத் தினந்தோறும் ஆதரித்து ஓதும் அன்பர்
முடியிடை நேர்படும் தூப்புல் அம்மான் பதமாமலரே

அழகிய திருமேனியையுடைய தூப்புலில் தோன்றிய வள்ளல் ஸ்ரீ தேசிகனின் திருவடிகள் விஷயமாக, ஸ்ரீ தேசிகன் அடியார்களுக்கு நித்யம் அனுஸந்தேயமாய் இருக்கும்படி சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றின் பொருளை அமைத்து அந்தாதித் தொடையாலே இருபது பாசுரங்களைப் பாடினேன். பூர்ண விச்வாசத்துடன் இப்பிரபந்தத்தை தினந்தோறும் போற்றி அனுஸந்திக்கும் பக்தர்களின் சிரஸில் ஸ்ரீ தேசிகன் திருவடிகள் சேரும்.

பிள்ளையந்தாதி உரை முற்றிற்று.